பாதுகாவலன்
PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால்மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-
வெளிநாட்டு சந்தா 15£
(30 U. S $).  தொகையா
கப் பத்திரிகை பெறுபவர்
கள் ஆண்டு சந்தா முற்பண
மாக செலுத்துவதாயின்
பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115  இதழ்: 3  20-1-1989  (ஜனவரி20-ஜனவரி27)  பிரதி ரூபா 1-50  இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# கல்வி உதவித் திட்டத்தினல் (BEAS) பயனடையும் பாடசாலை மாணவர்

**அருள்திரு. மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தினல் ஆண்டு தோறும் பல வறிய மாணவர்கள் பயனடைகின்றனர். இவ்வாண்டுக்கான பரிசில்கள் இம்மாதம் 17ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் வழங்கப்பட்டபோது யாழ்நகர கத்தோலிக்க பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் அதில் பங்குபற்றினர்கள்.**

நான்கு ஆண்டுகளுக்கு முன் அகால மரணமடைந்த அருள் தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு கடந்த செவ்வாய்க் கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் அருள்தந்தை பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தினல் (BEAS) ஒழுங்கு செய்யப்பட்ட இரங்கல் கூட்டுத்திருப்பலி பேராலயப் பங்குத்தந்தை மறைத்திரு ஹில்லறி ஜெபநேசன் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் தலைவரான மறைத்திரு. P. M. இம்மானுவேல் அவர்கள் தமது ஆரம்ப உரையில் இத்திட்டத்தின் நோக்கத்தை விளக்கி மறைந்த குரவரின் தியாக மனப்பான்மையைப்பற்றி எடுத்துரைத்தார். மறைத்திரு. J. நீக்கிலஸ் (செயலர்) அடிகளார் தமது மறையுரையில் ஏழைச் சிறுர்களின் கல்வி வளர்ச்சியில் மறைந்த குரவர் காட்டிய அக்கறையையும், இறை அழைத்தலினூடாக யேசுவின் பாதையில் அவர் ஆற்றிய பணிகளையும் குறிப்பிட்டு இன்றைய மாணவர்கள் கல்வியை எத்தகைய நோக்குடன் கற்க [illegible] வலியுறுத்தினர். திருப்பலி முடிவில் இத்திட்டத்தின் இணைச் செயலாளரான திரு. சி. ஸ்ரனிஸ்லாஸ் இத்திட்டத்தின் தற்போதைய செயற்பாடுகள், எதிர்காலத்திட்டங்கள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தார். கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட கவிதை-கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## மறை ஆசிரியர் பயிற்சி

வருடா வருடம் நடைபெற்றதுபோன்று 3 மாத பயிற்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. தைத்திங்கள் 11 ஆம் நாள் 4 மணியளவில் மறை ஆசிரியர்கள் புனித சின்னப்பர் நிலையத்தில் வரவேற்கப்பட்டனர். 12 ஆம் திகதி காலை 9 மணியளவில் மறைக்கல்வி நிலையத்தில் புதிய மறையாசிரியர்களுக்கு யாழ். ஆயர் அவர்களால் திருப்பலியும், ஆசீரும், மறையுரையும் வழங்கப்பட்டது. மறைக்கல்வி பயிலுநரின் பொறுப்பாளராகிய திரு. சவுந்தரம் அவர்களால் வரவேற்புரை ஆற்றப்பட்டது. அவ்வுரையில் மறை ஆசிரியர்கள் இறைத் தொண்டர்கள் என்பதுபற்றியும், அவர்களின் இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இயக்குநர் அருள்திரு. நேசநாயகம் அவர்கள் ஆயரையும், ஆசிரியர்களையும் வரவேற்று நன்றிகூறி, யாழ். ஆயர் அவர்களின் இடைவிடா தூண்டுதலினலும், ஒத்தாசையினலும் பயிற்சி நடத்தப்பட்டதுஎன்று கூறி பயிற்சியை தங்குதடையின்றி முடிக்க எல்லோரது ஒத்துழைப்பையும் கேட்டுநின்றுர். ஈற்றில் மறை ஆசிரியர்களின் அறிமுகத்துடன் பயிற்சி ஆரம்பமானது.

மறை ஆசிரியர்
அருட் சகோ. பிலமின


## விண்ணக அழைப்பு



யாழ். திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரி சென் சாள்ஸ் அவர்கள் கடந்த செவ்வாய் (17-1-89) அன்று இறைவனடி சேர்ந்தார்கள். தம் சபையின் அழைத்தல் ஆயத்த நிலையினரை உருவாக்குவதிலும் இவர் பல வருடங்கள் அரும்பணியாற்றினர். குருக்கள், குருமாணவர்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். எல்லோரையும் இன்முகத்தோடு வரவேற்று, அன்புடன் உபசரிக்கும் பண்பும் பாசமும் படைத்த எம் சகோதரி இளவாலை, நாரனட்டான், கிளிநொச்சி, வவுனியா, மானிப்பாய், கரம்பொன், மன்னர் ஆகிய இடங்களில் 48 வருடங்கள் அப்போஸ்தல பணியாற்றியபின் தமது 70-வது வயதில் இறைவனின் விண்ணக அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

"உயிர் வாழ்கையில்
என்னில் விசுவாசம்
கொள்பவன் எவனும்
ஒருபோதும் சாகான்"
அரு. 11: 26

மாகாணத்தலைவி,
தி. கு. மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ். மறைக் கல்வி நடு நிலையத்தில், பொது நிலையினர் ஆணைக்குழு நடாத்திய "கிறிஸ்துவைச் சந்திக்கும் கிறிஸ்தவன்" என்னும் கருவைக்கொண்ட சிறப்பு நாடகப் போட்டியில் சிறந்த கதைக்கான பரிசுக்கிண்ணத்தை, ஆணைக்குழுத் தலைவர் அருள்திரு S. H. ஜெபநேசன் அடிகளாரிடம் நெடுந்தீவுப் பங்கு பெற்றுக் கொள்வதை முதற் படத்திலும், சிறந்த நாடக பரிசுக் கேடயத்தை மிருசுவில் பங்கு பெற்றுக் கொள்வதனை இரண்டாவது படத்திலும், பொது நிலையினரது ஆணைக்குழு உபதலைவரும், மன்னர் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான திரு. A. C. செபநாயகம் அவர்கள் தலைமையுரை ஆற்றுவதை மூன்றுவது படத்திலும் காணலாம்.

## B. A. தோமஸ் அடிகளாரின் 25-வது நினைவு தினம்



தை மாதம் 26ஆம் திகதி (26-1-1989) செபமாலைத் தாசர் சபையினதும், செபமாலைக் கன்னியர் சபையினதும், நிறுவுனராகிய அருள்தந்தை B A. தோமஸ் அ. ம. தி. அடிகளார் இறையடி சேர்ந்த 25 வது ஆண்டு நிறைவுதினமாகும்.

அன்று (26-1-1989) காலை 7.00 மணிக்கு தோலகட்டி ஆச்சிரம பெரிய ஆலயத்தில் யாழ். மறைவட்டக் குருமுதல்வர் அருள்திரு. S. A. மைக்கல்சாமி அ. ம. தி. அவர்கள் தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெறும்.

அதைத்தொடர்ந்து அடிகளாரின் கல்லறை ஆசீர்வதிக்கப்படும். குருக்கள், அருட்சகோதரர், அருள்சகோதரிகள், மக்கள் இதில் கலந்து அவரின் வழியாக ஆண்டவரின் அருளைப் பெறுவோம்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# கிறிஸ்தவப் பொங்கல்

பொங்கல் விழா முடிந்து விட்டது. நாம் பொங்கியும் முடிந்து விட்டது. ஆனால் சிலர் தமது மனத்துள் இன்னும் பொங்கிமுடியவில்லை. "அந்த நாளில் இத்தகைய சடங்குகள் எல்லாம் பேய்க்கூத்துகள் என்று சொன்னவர்களே இப்பொழுது கோவில்களில்கூட பொங்குகிறார்கள்" என்ற முறைப்புகளும், முணு முணுப்புகளும் இன்றும் கேட்கத்தான் செய்கின்றன.

பொங்கல் என்பது யாருடைய விழா? அது சமய சார்புடைய விழாவா? என்ற வினாக்களுக்கு உரிய விடையை நாம் முதலில் ஆராயவேண்டும்.

பலஇனமக்களைக் கொண்டது பாரதம். இந்துக்களைப் பெரும் பான்மையாகக் கொண்டது இந்தியா. இந்துமதம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பரவலாக உள்ளது. பொங்கல் இந்து சமயவிழாவாக இருப்பின் இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டும் கொண்டாடப் படுவதன் காரணம் என்ன? அண்டை மாநிலமான கேரளத்தில்கூட பொங்கலுக்கு முக்கியத்துவம் இல்லை யென்றால் அதன் பொருள் இந்தவிழா தனியே தமிழருக்கு மட்டுமே உரிய விழா என்பது தானே. எனவே இது ஒரு இனத்தின் விழா என்ற வகையில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இவ்விழாவுக்குக் கொடுக்கும் வரவேற்பு தேவையானது தான்.

மேலை நாட்டவர்களால் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவம் தமிழர்களை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வைத்த நல்ல காரியத்தைச் செய்ததுமட்டுமல்ல எமக்கே உரியதான பொருள் நிறைந்த பண்பாடுகளை, பழக்க வழக்கங்களையெல்லாம் எம்மிடமிருந்து அந்நியப்படுத்திவிட்டது என்பதை வெகுகாலத்துக்குப் பின்னரே நாம் உணர்ந்து கொண்டுள்ளோம்.

உழைப்பின் முதற்கனியை அதனைக்கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறி காணிக்கையாக ஒப்புக் கொடுப்பது என்பதை ஆபேல் ஒப்புக் கொடுத்த பலி மூலம் ஆதியாகமம் நினைவூட்டி நிற்கின்றது. அந்தப் பொருள்பட அறுவடைத் திருநாளாம் - தைப் பொங்கலை தமிழர் கொண்டாடுவது எமது கடமையே.

உலகத்து நீரை ஆவியாக்கி-ஆவியை மேகமாக்கி மழையைப் பொழியச் செய்ததினால் பயிர்களைப் பசுமையாக்கி - பின்னர் காய்ந்த நெற்கதிராக்கிய சூரியனுக்கு நன்றி கூறும் விழாவாக கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்கள் காரணம் கூறுவர். ஆனால் எமபோன்றவர்கள் - சூரியனைத் தெய்வமாக ஏற்றுக் கொண்டு அல்ல, இந்தப் பொங்கலுக்கு அரிசிமணியைப் பெற ஆதாரமாக விருந்த சூரியனைப் படைத்துக் கொடுத்த அந்த இறைவனுக்கு நன்றிகூறும் விழாவாக நாம் கொண்டாடுவோமாகில் நிச்சயமாக இது இன்னுமொருசமயத்தின் விழா என்ற பொருள் அகன்று போகும்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' இன்றும் எமது விவசாயக் கிறிஸ்தவ கிராமங்கள் பலவற்றில் உழவர்கள் எல்லோரும் கோவிலில் ஒன்று சேர்ந்து 'புதிர்' பொங்கி மகிழ்ந்து பரிமாறும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இது சூரியக் கடவுளுக்குச் செய்யப்படும் சடங்காக அல்ல எமது முதற்கனியை நன்றிக் காணிக்கையாகக் கொடுக்கும் சடங்காகவே கிறிஸ்தவர்கள் கொள்ளுகின்றோம்.

எனவே தமிழருக்குரிய இப்பண்பாட்டுச் சடங்கு இன்னுமொரு மதத்தின் சடங்கு என்ற நோக்கோடு செய்யப்படுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். பொங்கல் மட்டுமே அன்று தமிழருக்கே உரிய எத்தனையோ பொதுச்சடங்குகளை எமது வழிபாட்டில் வாழ்வில் இணைத்துக் கொள்ள திருச்சபை அனுமதித்துள்ளது. ஆனால் அவற்றின் பொருளுணர்ந்து குருட்டுப்பக்திகள் மூடநம்பிக்கைகளுக்கு இடம் கொடாவகையில் செய்வதே பொருத்தமாகவிருக்கும்.

## தேனருவி

ஆண்டின் 3-ம் ஞாயிறு (22-01-89)

### சிறப்பிடம் கொடுங்கள்

ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆலயமும், விழாக்கோலம் கொண்டு மகிழ்கிறது. விழாவுக்கு ஆயத்தமாக நவநாட்கள் திரிதினங்கள் அமைகின்றன. நடைபெறும் இத்திருவிழாக்கள் எப்படி சிறப்பிக்கப்படுகின்றன? முடி, கொடி, வடி, அடி பிடி, இராணுவம் அனுமதித்தால் வெடி போன்ற "டீக்கள்" ஒன்று சேர்ந்து 'டும், டும்' போடுகின்றன. இதுதான் எம் விழாவின் கோலம்.

பவனி வருவது எந்தப்பாதையால்? கூடு சுமப்பது யார்? கவிபாடுவது எவர்? வாசிப்பது எந்தக்கட்சி? பாடகர் குழாமில் முன்னணி வகிப்பது யார்? தானம் எப்போது வழங்குவது? நாடகம் எங்கு அரங்கேறுவது? மின்விளக்குகள் இவ்வளவு தானா? ... என்று ஏதோ ஒரு சர்ச்சை முளைத்துவிடும். மக்களை ஒன்று சேர்க்க வேண்டிய திருவிழா ஒன்றிப்பையே குலைத்து விடுகிறது. புனிதமான திருவிழா கறைபடிந்து விடுகிறது.

இஸ்ராயேல்மக்கள் கொண்டாடிய கூடாரத் திருவிழா எப்படி அமைந்தது என நெகேமியா ஆகமத்தில் கூறப்படுகிறது. விழாவன்று காலைமுதல் நண்பகல் வரை அவர்கள் ஒன்று கூடி இறைவார்த்தைக்கும், அதன் விளக்கத்திற்கும் ஆர்வமுடன் கூர்ந்து செவிமடுத்தனர். துன்பங்களில் துணை செய்த ஆண்டவரின் அருஞ் செயல்களை வார்த்தை வழியாக நினைவு கூர்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். அவ் வார்த்தை உள்ளங்களை உருக்கியது. ஊட்டம் பெற்ற மக்கள், தாம் அனைவரும் இறைவன் அரவணைப்பில் வாழும் ஓரின மக்கள் என்று தெளிவு கொண்டனர். இறை மாட்சியை ஏற்று 'ஆமேன்' 'ஆமேன்' என்றுரைத்து ஆண்டவரைத் தொழவும் இறைவார்த்தை தூண்டியது. தம் உள மகிழ்வைப் பந்தியிலும், அன்புறவிலும் வெளிப்படுத்தினர். இவ்வாறு இறைவார்த்தை அம்மக்களின் விழாவைச் சிறப்பித்தது.

ஆலயத்திருவிழா மட்டுமல்ல, ஒவ்வொரு விழாவும், வழிபாடும், கிறிஸ்தவ ஒன்றுகூடலும் வெறும் அர்த்தமற்ற சடங்குகளாலும், மூடக்கொள்கைகளாலும், சம்பிரதாயங்களாலுமல்ல; இறைவார்த்தையால் சிறப்பிக்கப்படவேண்டும்.

இசையாஸ் எழுதிய ஏட்டுச்சுருளின் வாக்குத் தம்மில் நிறைவு செய்யப்படுவதாக மொழிந்த இயேசு, இறைவார்த்தையும் இயேசுவும் ஒன்று என்கிறார்.

இறைவார்த்தை எடுத்துரைக்கப்படும் போது இயேசுவே உயிருள்ள விதமாய் பிரசன்னம் தருகிறார் என்பதும்இதிலிருந்து புலனாகிறது. சமூகத்தில் ஆற்றல்களும், பணிகளும், விருப்புக்களும் பலவிதமாயினும் ஒருடலாக இணைத்து இயங்கவைப்பதும் அவர் பிரசன்னமே. இதனால் இறைமக்கள் அனைவரையும் இணைக்கும் பாலமாகவும், சக்தியாகவும் இயங்கும் இயேசுவின் இறைவார்த்தை அனைத்து ஒன்று கூடுதலிலும் சிறப்பிடத்தைத் தட்டிக்கொள்ளல் அவசியம். அருட்சாதனக் கொண்டாட்டங்கள், பக்திச் சபை, பொது நிலையினர் குழு, குடும்ப வைபவங்கள், போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் இறைவார்த்தை வாசிப்பு, சிந்தனை சிறப்பு இடம் பெறவேண்டும். இறைவார்த்தைக்குச் சிறப்பிடம் என்றதும் நூலுக்குப் பொன்னுறை போட்டு, மாலை இட்டு, ஆராத்தி எடுத்துவிட்டால் அல்லது பல பக்த இயக்கத்தினர் செய்வது போன்று சில வரிகளை மனப் பாடமாக்கி செல்லுமிடமெல்லாம் நூலைத் தூக்கித் திரிந்தால் போதாது இறைவார்த்தை புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தெளிவாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். கேட்போர் கூர்ந்து, உள்ளத்தால் செவிசாய்க்கவேண்டும். உயிருள்ள வார்த்தை உள்ளங்களில் கருக்கொண்டு புதிய உணர்வுகளையும், மனநிலைகளையும், புதிய வாழ்க்கை முறைகளையும் பிறப்பிக்கவேண்டும். விழாக்களையும், வழிபாடுகளையும் மட்டுமல்ல, வாழ்வையும்—தனியாகவும், கூட்டாகவும் சிறப்பித்து இயக்கம்பெற வைப்பது ஆண்டவரின் உயிருள்ள வார்த்தையாகும்.

சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

நெகே. 8:2-10 திருச்சட்ட நூலுக்கு செவிசாய்த்தனர்.
1 கொரி. 12:12-30 நீங்களோ கிறிஸ்துவின் திருவுடல்.
லூக். 1:1-4; 4:14-21 கண்கள் அனைத்தும் அவரையே நோக்கின.

# தாயகம் திரும்பிய மாணவர்களுக்கான புத்தூக்கம்

## பயிற்சி வகுப்புக்களை துயர்துடைப்புச் சங்கம் நடாத்தி வருகின்றது

கடந்த 3 வருடங்களாக பல புனித சேவைகளை மக்களின் நலன் கருதி ஆற்றிவரும் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம், கல்விச் சேவைக்கு மேலும் புதிய திட்டங்களை வகுத்து திறம்பட நடாத்தி வருவது பலராலும் குறிப்பாக மன்னார் மாவட்ட கல்வி இலாகாவினால் பாராட்டத்தக்க தொன்றாகும். இச்சங்கம் குறிப்பாக இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அவர்களின் திறமையை மேலும் ஊக்குவிக்க மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருவதைக் கண்டு நான் பெருமிதமடைகின்றேன். என அண்மையில் துயர்துடைப்பு சங்கத்தினால் நடைபெற்ற மேலதிக வகுப்பு, ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மன்னார் பிரதம கல்வி அதிகாரி ஜனாப். சட். ஏ. றகிம் கூறினார்.

ம. து. ம. ச. கல்விச்சேவையின்கீழ் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய கல்வியில் பின்தள்ளப்பட்ட மாணவர்களுக்காக கடந்த ஆறு மாதங்களாக, மேலதிக வகுப்புகள் மன்னார் மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் நடாத்தப்பட்டு வருவது சகலரும் அறிந்ததே. இச்சேவை பற்றி அதன் தலைவர் வண. பிதா - அ. சேவியர் குரூஸ் விளக்குகையில், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய மாணவர்களுடன் நாம் ஆய்வு நடாத்துகையில் 80% வீதமானோர் இரண்டு தொடக்கம், மூன்றாண்டுகளாக இந்தியாவில் அகதிமுகாம்களில் கல்வி அறிவின்றி காலம் கடத்தினர். பின்னர் இவர்கள் தாயகம் திரும்பியதும் இலங்கை புதிய கல்வித் திட்டத்தில் கற்க சிறிது தயக்கம் காட்டினர். இவர்களில் பலர் மீண்டும் பழைய ஆண்டிலே கற்கவேண்டி வந்துள்ளது. இவர்களின் துயரைப் போக்க இச்சங்கம் "புத்தூக்க மேலதிக பயிற்சி வகுப்புக்களை" 26 பாடசாலைகளில் 60 ஆசிரியர்களை கொண்டு நடாத்துகின்றது. இதனால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைகின்றனர்.

ம. து. ம. ச. கல்விச்சேவை அதிகாரியும், கல்விப் பணிப்பாளருமாகிய ஜனாப். எம். எ. சி. முகைதீன் இத்திட்டத்திற்கு நமக்கு இலாகாவின் முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றார்.

சின்கிளேயர் பீற்றர்
செயலாளர்
மன்னார் துயர்துடைப்பு
மறுவாழ்வுச் சங்கம்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

## "உலக சமாதானத்தைக் கட்டியெழுப்ப சிறுபான்மையோரை மதியுங்கள்"

# ஒரு சிறுபான்மைக்குழு சில குறிப்பிட்ட அரசியல் தாற்பரியங்களையுடைய கோரிக்கைகளை விடுக்கும்போது சங்கடமான பிரச்சினைகள் உண்டாகின்றன

(சென்றவாரத் தொடர்ச்சி)

7. சிறுபான்மையினரால் பாதுகாக்கப்பட வேண்டிய மற்றொரு உரிமை தமது சொந்த கலாசாரத்தை பேணி விருத்தி செய்யும் உரிமையாகும். சிறுபான்மைக் குழுக்கள் கலாசார ரீதியாக அழிக்கப்படும் அச்சுறுத்தல் நாம் கேள்விப்படாத ஒன்றல்ல உண்மையாகவே, சில இடங்களில் தமது சொந்த மொழியை உபயோகிப்பதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமையை ஏற்காத சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில சமயங்களில் மக்கள் தமது குலப்பெயர்களையும் இடப்பெயர்களையும் மாற்றவேண்டியுள்ளது. தமது விழாக்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் பொதுவாழ்வில் இடமளிக்கப்படாதபடியால் சில சிறுபான்மையினர் அழகியல் துறையிலோ இலக்கியத்துறையிலோ தமது கருத்துக்களை வெளியிடும்போது அவை கவனிக்கப்படுவதில்லை. இவையெல்லாம் சிறப்புடைய ஒரு கலாசாரப் பாரம்பரியம் அழிந்துபோவதற்குக் காரணமாகலாம். இந்த உரிமையோடு நெருங்கிய தொடர்புடைய மற்றொரு உரிமை, ஒரே கலாசார, வரலாற்றுப் பாரம்பரியமுள்ள ஆனால் மற்றொரு நாட்டின் பிரதேசத்தில் வாழுகின்ற பிற குழுக்களுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ளும் உரிமையாகும்.

8 இவ்விடத்தில் மத சுதந்திரத்தைப்பற்றி ஒரு குறிப்பு மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் சென்ற ஆண்டின் சமாதானதினச் செய்தியில் எனது கருத்தாக இருந்தது இதுவே. இந்த உரிமை சகல சமயக் குழுக்களுக்கும் தனி நபர்களுக்கும் பொருந்துவதாகும். தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் தமது சமய நம்பிக்கைகளைப் புறத்தே வெளிப்படுத்தும் சுதந்திரமும் இதனுள் அடங்கும் எனவேசிறுபான்மை மதத்தவர் ஒருகுழுவாக, தமது சொந்த சமய மரபின்படி வழிபாடு செய்யக்கூடியதாயிருக்கவேண்டும். தக்க கற்பித்தல் திட்டங்களின் மூலம் மறையறிவைப் போதிக்கவும், இந்நோக்கத்துக்காக தேவைப்படும் வழிவகைகளைப் பயன்படுத்தவும் அவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

மேலும், மத சுதந்திரம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை அரசு கவனித்து உறுதி செய்யவேண்டும் பெரும்பான்மை மக்கள் ஒரு சமயத்தைச்சார்ந்தவராயிருக்க, வேறுசமயங்களைப் பின்பற்றும் ஒரு சில குழுக்கள் அந்நாட்டில் இருக்குமானல் இது மிக முக்கியமாகும்.

இறுதியாக, நாட்டிற்குள்ளும் அதற்கு வெளியிலும் உள்ள பிற குழுக்களோடு தொடர்புகொள்ளவும், பரிமாற்றம் செய்யவும் சிறுபான்மை மதத்தவருக்கு நியாயமான சுதந்திரம் இருக்கவேண்டும்.

9. இன்று, அடிப்படை மனித உரிமைகள் எத்தனையோ தேசிய, சர்வதேச சாசனங்களில் இடம்பெற்றுள்ளன! சட்டரீதியான இந்தப் பத்திரங்கள் எவ்வளவு அவசியமானவையாக இருந்தபோதிலும், ஆழமாக இடம் பெற்றுவிட்ட தப்பெண்ணங்கள், சந்தேகங்களை மேற்கொள்வதற்கோ, சிறுபான்மைக் குழுக்களுக்கெதிரான செயற்பாடுகளை தூண்டிவிடக்கூடிய சிந்தனைகளைத் தவிர்ப்பதற்கோ இவை போதுமானவை அல்ல. சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதென்றால், முக்கியமாக இத்தகைய தவருன மனப்பான்மைகளைக் களையும் நோக்குடன் அதை செயற்படுத்துவதென்றால், அது மிக நீண்டதும் தாமதமானதுமாகும். ஆனல் இதனல் அது மிக அவசரமானதன்று என்பது பொருளல்ல. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தம்மாலான யாவற்றையும் செய்வது அரசுக்கு மட்டுமல்ல. ஒவ்வொரு தனிநபருக்குமுள்ள கடப்பாடாகும். ஆனல் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கக்கூடிய கலாசார நிகழ்ச்சிகளுக்கும் பரிமாற்றங்களுக்கும் ஆதரவளிப்பதன் மூலமும், பெரும்பாலும் அறியாமையால் ஏற்படும் தப்பெண்ணங்களை நீக்கி பிறருக்கு மதிப்பளிக்க இளைஞரைப் பயிற்றுவிக்கும் கல்வித்திட்டங்களை ஊக்குவிப்பதன் மூலமும் அரசு இதற்குச் சிறந்த பங்களிப்புச் செய்யக்கூடும். பெற்றோருக்கும் இதிற் பாரிய பொறுப்புண்டு. பிள்ளைகள் தாம் அவதானிப்பதையே கற்றுக்கொள்கின்றனர். ஆகவே ஏனைய மக்களையும் குழுக்களையும் பொறுத்தமட்டில் பெற்றோரின் மனப்பான்மை எத்தகையதாக இருக்கிறதோ, அதனையே பிள்ளைகளும் பின்பற்றப் பார்ப்பர்.

பிறர் மட்டில் மதிப்பின் அடிப்படையில் ஒரு கலாசாரம் வளர்ச்சியடைவது அமைதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமாகும். ஆனல் துரதிர்ஷ்டவசமாக இந்த மதிப்பை பயனுள்ள விதமாக செயற்படுத்துவதில் இன்று ஓரளவு கஷ்டமிருப்பதாகக் காணப்படுகிறது.

நடைமுறையில், புதுப்புது விதங்களில் பாரபட்சம் காட்டப்படுவதை — உதாரணமாக வீடமைப்பு, தொழில் வாய்ப்பு ஆகியவற்றில்—தடுப்பதற்கு அரசு விழிப்பாக இருக்கவேண்டும். இவ்விடயத்தில் தொண்டர் குழுக்களும், சமய ஸ்தாபனங்களும், நல்லெண்ணம் வாய்ந்த பெரியோரும் அரச அதிகாரிகளின் பணியிற் குறைவாக உள்ளதை ஈடுசெய்கின்றனர். தொழில் வாய்ப்பும், தகுந்த இல்லிட வசதியும் பெற்றுக்கொள்வதற்கு தமது சகோதர, சகோதரிகளுக்குத் துணைபுரிவதன் மூலம், பதற்றங்களைத் தணித்து சமூக நீதியை விருத்திசெய்ய இவர்கள் பெருந்தன்மையுடன் எடுக்கும் முயற்சி போற்றத்தக்கது.

10. ஒரு சிறுபான்மைக்குழு சில குறிப்பிட்ட அரசியல் தாற்பரியங்களையுடைய கோரிக்கைகளை விடுக்கும்போது சங்கடமான பிரச்சினைகள் உண்டாகின்றன. ஒரு குழு சிலவேளை தனிநாடு கோரக்கூடும் அல்லது கூடுதலான ஆட்சியுரிமையையாவது கோரக்கூடும்.

அத்தகைய சங்கடமான சந்தர்ப்பங்களில் உரையாடலும் பேச்சுவார்த்தையுமே சமாதானத்திற்காகக் கட்டாயம் பின்பற்றவேண்டிய வழிகளாகும். சமாதானத்திற்குப் பெரும் தடைகளாக இருக்கக்கூடிய சிக்கலான பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு இன்றியமையாத ஒரு நிபந்தனை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் சந்தித்துப் பேச முன்வருவதேயாகும். உரையாடலில் பங்குபற்ற மறுத்தால் அது வன்முறைக்கு வழிகோலக் கூடும்

சில சமயம் போராட்டங்கள் ஏற்படும்போது பயங்கரவாதக் குழுக்கள் சிறுபான்மையினருக்காக குரல்கொடுப்பது தமது ஏகபோக உரிமை எனக்கொண்டு, எவ்வித அச்சுறுத்தலுமின்றி, வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கக் கூடிய வாய்ப்பைப் பறித்துவிடுகின்றன. அத்துடன், தமது பெயரால் தவருக இழைக்கப்பட்ட வன்செயல்களுக்காக இச்சிறுபான்மைக் குழுக்களின் அங்கத்தவர்களே பல துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேரலாம்.

மனிதத்தன்மையற்ற பயங்கரவாத வழியைப் பின்பற்றுவோர் என் குரலுக்கு செவிசாய்ப்பார்களாக. கண்மூடித்தனமாகத் தாக்குவதும், அப்பாவி மக்களைக் கொல்வதும். கொடுமையான பழிவாங்குதல்களும், எந்த சிறுபான்மையினருக்காகத் தாம் செயற்படுவதாகக் கூறிக்கொள்கிறார்களோ, அச்சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நியாயமான முறையில் பரிசீலனை செய்வதற்கு உதவப்போவதில்லை. (தொடரும்)

## சேவைநலம் பாராட்டு விழா

19.12.88 அன்று ஆசிரிய சேவையினின்று இளைப்பாறும் அருட்செல்வி ஏஞ்சல் அவர்களின் அரும்பெரும் சேவைகளைப் பாராட்டி மன். வங்காலை சென். ஆன்ஸ் மகாவித்தியாலயத்தில் 29.11.88 செவ்வாய்க்கிழமை விழாநடைபெற்றது. அருட்செல்வி ஏஞ்சல் இப்பங்கில் மீண்டும் சேவையாற்றக் கிடைத்தது இப்பங்குமக்களுக்கும் மகா வித்தியாலய மாணவர்களுக்கும் ஒரு பெரும் வரப்பிரசாதமே, மாணவர்களின் கல்வி வளர்ச்சியோடு ஆன்மீகத் துறையிலும் விசேட அக்கறை காட்டித், தவருன பாதையில் சென்ற மாணவர்களுக்கு நல் வழிகாட்டி உழைத்ததோடல்லாமல், ஆலயத்தை அலங்கரிப்பதிலும், திருப்பலிக்கு ஆயத்தம் செய்வதிலும் தன்னை அர்ப்பணித்துச் சேவை புரிந்ததை மக்கள் மறக்க முடியாது.

தலைமை வகித்துப்பேசிய கொத்தணி அதியர் திரு A. செபமாலை அவர்கள், அருட்செல்வி ஏஞ்சல் அவர்கள் தம் பெயருக்கு ஏற்றபடி மாணவர்களுக்குச் சிறந்த காவலனகவும், உயர்தர மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், உயர்தர மாணவர்கள் சமய பாடத்தில் அதிக மாணேர் அதிதிறமைச் சித்தியடையச் சிறந்த ஆசிரியையாகவும், பாடசாலையில் சமய சம்பந்தமான விழாக்களை நடத்துவதிலும் மரியாயின் சேனை, புனித வின்சென்ற் டி போல் சபைகளை இயக்குவதிலும் சிறந்த நிர்வாகியாகவும் செயற்பட்டு மாணவர் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டார். அவரின் வெற்றிடத்தை நிரப்புவது எவருக்கும் முடியாதென்று புகழ்மாலை சூட்டினர்கள். தொடர்ந்து ஆசிரியர்கள் திரு. C. திபூசியஸ் பீரீஸ், திரு S. சண்முகலிங்கம், திருமதி J.J. டலிமா, திருமதி A. F. குருஸ் ஆகியோர் உரைகள் வழங்கினர்கள். உயர்தர மாணவர்கள் இசைவிருந்தும், அன்பளிப்புக்களும் அளித்துக் கௌரவித்தார்கள். சங். சகோதரி 1952ல் பண்டத்தரிப்பு றோ.க. பாடசாலையில் சேவையை ஆரம்பித்து, மாதகல், வவுனியா, மன்னர் பருத்தித்துறை, கிரிசுட்டான், வங்காலை ஆகிய இடங்களில் சேவையாற்றவும், கடைசிக் காலத்தில் கிரிசுட்டானில் அகதிகள் மத்தியில் புதிய பாடசாலை அதிபராகவும், ஈற்றில் வங்காலையில், இறைவனுக்கும் மக்களுக்கும் அதிக சேவையாற்றக்கிடைத்ததும் தேவனின் மாபெரும் கிருபையேயென வாழ்த்தினர்கள். தொடர்ந்தும் 1.12.88 அன்று திருப்பலியில் மாணவர்கள் அருட்சகோதரிக்காக மன்ருடி விசேட நன்றிகளைத் தெரிவித்ததும் பாராட்டுதற்குரியது. நன்றி!

தகவல் V.A. லெம்பேட்

## மாதகல் பதியில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின் சாதனை

பாவஇருள் அகற்ற பாரினில் ஜனனித்த பரமன் கிறிஸ்து உலகிற்கு ஒளியானர்,

இந்த கிறிஸ்துவின் ஜனனவிழா மாதகல் பகுதியில் பங்குத்தந்தையின் அநுசரணையுடன் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் 29.12.1988 அன்று மாலை 4 30 மணியளவில் புனித தோமையார் ஆலய முன்றலில் இடம்பெற்றன. முதலில் எமது பங்குத்தந்தை அருள்திரு. றெஜிராஜேஷ்வரன் அவர்கள் தீப ஒளியேற்றி கிறிஸ்துவின் ஜனன விழாவை ஆரம்பித்து வைத்தார். பின்னர் ஒன்றியத்தலைவரினல், வரவேற்புரை வழங்கப்பட்டது. பின்னர் 'கிறிஸ்து பிறப்பை' மையமாகக்கொண்டு நாடகம், நடனம், வில்லுப்பாட்டு, கவிதையரங்கு, இன்னிசைவிருந்து ஆகிய இன்னேரன்ன நிகழ்ச்சிகள் இளைஞரால் நடத்தப்பட்டு பார்த்த மக்கள் மனதைக் கவர்ந்தன. பின்னர் கிறிஸ்து பிறப்பையொட்டி பங்கில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டது. பின்னர் பங்குத்தந்தை 'கிறிஸ்து பிறப்பை' பற்றி சிறப்புரை வழங்கினர். இறுதியில் ஒன்றியச் செயலர் நன்றியுரை வழங்கினர்.

இரவு 8 மணியளவில் ''கிறிஸ்துவின் ஜனன விழா'' இனிதே நிறைவேறியது. மாதகல்வாழ் கத்தோலிக்க இளைஞர்கள் யாவரும், பேதம் எதுவுமின்றி ஒரே சமூகமாக, ஒற்றுமையாகவும், துடிதுடிப்பாகவும் இவ்விழாவை சிறப்பிக்க செயல்பட்டமை மாதகல் பதிவாழ் கத்தோலிக்க மக்களுக்கு பெரும்சாதனையாக அமைந்தது

தகவல்:- மாதகலூர் மா. ஜெறி

### பொன் மொழிகள்

நற்குணமுள்ள ஒரு பெண்ணை விட உலகில் சிறந்த செல்வம் இல்லை.

★

பெண் விரும்பினலும் சரி வெறுத்தாலும்சரி எதையும் செய்யத் துணிந்துவிடுவாள்.

தொ. ஜீவநந்தினி
போயிட்டி, இளவாலை

# கந்தைத் துணியும் கல்வாரியும்

## சிறுகதை

அந்தத் தேவாலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் திருச்சிலுவைப் பாதை நடைபெறுவது வழக்கம். முன்னர் இருந்த வயோதிபப் பங்குத் தந்தை, அதனை ஆரம்பித்து வைத்திருந்தார். அது நன்கு இயங்கி வந்துகொண்டிருந்தது. ஆனாலும் அதில் பங்கு பற்றுபவர்களில் அநேகர் பெண்களாகவே இருந்தனர். அந்த வயோதிபப் பங்குத் தந்தை இறைவனடி சேர்ந்த பின்னர் இளைஞரான பங்குத் தந்தை ஒருவர் வந்தார்.

இவ்வழிபாடு நடப்பது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எவ்வித வேலை இருந்தாலும் தானும், விசுவாசிகளோடு அதில் பங்குபற்றி வந்தார். சில வெள்ளிக் கிழமைகள் சென்றுவிட்டன. அவருக்கு ஒரு விடயம் 'புதிராக' இருந்தது. எப்போதும் ஆறும் ஸ்தலத்துக்கு வந்ததும் ஒரு பெண் அதில் பங்கு பற்றாமல், ஏழாம் ஸ்தலத்துக்குச் சென்று விடுவாள். அவளுடைய திருச்சிலுவைப் பாதை பதின் மூன்று ஸ்தலங்களாகக் குறைந்திருந்தது. அவளை எல்லோரும் 'ஞானம்மாக் குஞ்சாச்சி' என அழைத்தனர்.

ஒரு நாள் பங்குத் தந்தை, திருச்சிலுவைப் பாதை முடிந்ததும் தனியே ஞானம்மாவை அழைத்து அப்புதிருக்கான விடையைக் காண முற்பட்டார். ஞானம்மா சொன்னாள் "ஐயோ சுவாமி, அது பெரிய கதை, பாருங்கோ இந்தக் கோவிலிலே முந்திப் பாடுபட்ட சுரூபங்கள் இருக்கவில்லை. முன்னர் இருந்த சுவாமிதான் இந்தக் கோவிலைச் சேர்ந்தவர்கள் மூலமாகச் சுரூபங்களை வாங்க ஏற்பாடு செய்தார். உந்த ஆறும் ஸ்தலச் சுரூபம் உவள் வெரோணிக்கம்மா தான் வாங்கிக் கொடுத்தவள். அவள் என்ரை எதிரி சுவாமி என்னோடு வேலி வழக்காடினவள் எட்டு வருசமாக, அதுவும் டாழாய்ப்போன நீதிபதியும் அவளுக்குச் சார்பாயல்லோ தீர்த்துப் போட்டார். அவளைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. அதவும் தன்ரை பேர் வரட்டுமென்று தான் ஆறும் ஸ்தலச் சுருபத்தைப் பொறுப்பெடுத்தவள்." பங்குத் தந்தைக்கு அவளுடைய வைராக்கியம் ஆச்சரியத்தைக் கொடுத்தது. 'இப்படியும் கிறிஸ்தவர்கள் உள்ளார்களா?' ஏனெனில் அவருக்கு இது முதற் பங்கு.

"அது சரி நீங்கள் ஒரு சுருபமும் வாங்கிக் கொடுக்கவில்லையா?" என்றார் பங்குத் தந்தை, "விடுவேனே சுவாமி அவள் ஆறும் ஸ்தலத்தை எடுக்க நான் இன்னும கூடப்போய் பதினாலாம் ஸ்தலத்தை எடுத்துப் போட்டன். ஆனாலும் ஒரு குறை சுவாமி, ஆறும் ஸ்தலத்தில் அவள் வரோணிக்காவின்ரை பேர் வருகுது. அது சரி சுவாமி ஆண்டவர் கல்வாரியிலை எத்தனை அர்த்தமுள்ள வாக்கியங்களைத் தெரிவித்தார் தெரியம்மா உங்களுக்கு?" அவள் கேட்டது யாரை, ஆறு ஏழு வருடம் திருமறை பற்றிக் 'கரைச்சுக் குடித்திட்ட'' இளம் பங்குத் தந்தையை இதைக் கேட்டுவிட்டுத் தனக்கு அவசர வேலை இருப்பதாக ஓடுகிறாள் ஞானம்மாக் குஞ்சாச்சி.

பங்குத் தந்தை அவளை ஒரு கேள்வி கேட்பதற்குத் தயாராக இருந்தார். ஆனால், அதற்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அது இதுதான்'' அதுசரி ஞானம்மா நீங்கள் வாங்கிக் கொடுத்த பதிலைலாம் ஸ்தலச் சுருபத்தில் வெரோணிக்கம்மா பங்கு பற்றுகிறாளா?'' ஞானம்மாக் குஞ்சாச்சி போனதும் பங்குத்தந்தை கல்வாரி வசனங்களில் ஒன்றை நினைத்துக் கொண்டார். "பிதாவே இவர்கள் அறியாமல் செயகிறார்கள்......"

அதன் பின்னர் சில நாட்கள் பறந்தன, கிறிஸ்மஸ் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெறறன அன்று கிறிஸ்மஸ் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. அன்று கிறிஸ்மஸ் திருப்பலி காலை ஆறு மணிக்கு நடைபெற்றது. அது முடிந்ததும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு, யேசு பாலனைப் பார்ப்பதற்குக் கூடினர். பங்குத் தந்தை அடுத்த கோவில்களுக்குத் திருப்பலி நிறைவேற்றப் பறந்து விட்டார்.

❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈

வே. சாமுவேல்
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.

❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈ ❈

அன்று பின்னேரம் பங்குத் தந்தை கோவில் அருகில் உள்ள மாமரங்களின் கீழ் உலாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஞானம்மாக் குஞ்சாச்சியும், வேறொரு பெண்ணும் பங்குத் தந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். "சுவாமி இவள்தான் வெரோணிக்கம்மா'' இது ஞானம்மாவின் குரல் பங்குத் தந்தைக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் சில நாட்களுக்கு முன் சந்தித்த ஞானம்மாவை நினைத்துக்கொண்டார் அவள் தொடர்ந்தாள் "சுவாமி எங்கடை கோவிலிலை முன்னர் இருந்தது 'குட்டிப் பாலன்' பிறப்புச் சுருபங்கள். இவளுடைய மகன் இத்தாலியிலை வேலைபார்க்கிறார். அவர்தான் உந்தப் பெரிய பாலன் பிறப்புச் சுருபங்களை அனுப்பி வைத்தவர். அத்துடன் ஆறும் ஸ்தலத்துக்கான சுருபத்துக்கும் பொறுப்பாக இருந்தவள்'' இதைச் சொல்லும்போது ஏதோ பங்குத் தந்தைக்கு முதன் முதலாகச் சொல்வதாக அவள் நினைத்திருக்கலாம். ஆனால் அது இரண்டாம் முறை என்பது பங்குத்தந்தைக்குத் தெரிந்திருந்தது. காலமை இந்தப் பாலன் பிறப்புச் சுருபங்களைப் பார்க்கேலாமல் போட்டுது. அதுதான் இப்ப இரண்டு பேருமாக வந்தனாங்கள்'' பங்குத்தந்தைக்கு ஆச்சரியம் அதிகரித்துச் செல்கிறது அதுமட்டுமல்ல, அதன்பின் தொடர்ந்தாள் ஞானம்மா. "கதேக்கை கதை சுவாமி என்ரை இளைய மகளுக்கும் வரோணிக்காவின்ரை இத்தாலியிலை இருந்து வந்திருக்கின்ற மூத்த மகனுக்கும் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. அது குழந்தை யேசுவால் தான் நிறைவேறியுள்ளது. குறிப்பாக வரோணிக்காவின் பாலன் திருச்சுருபங்களால்தான் நிறைவேறியுள்ளது. வசதியான நேரம் வாறன் சுவாமி இதைப் பற்றிக் கதைக்க'' இதைச் சொல்லிவிட்டு ஞானம்மா வெரோணிக்கம்மாவைக் கூட்டிக்கொண்டு போகிறாள் பாலன் கொட்டிலுக்கு.

அங்கே இருவரும் தமக்கிடையே இதுவரை ஒருவித விக்கினமும் இல்லாததுபோல் பாலனைத் தரிசித்தனர். அந்த யெருசலேமில் மாட்டுத்தொழுவத்தில் கந்தைத் துணிகளால் சுற்றியிருந்த பாலனை நினைத்துக் கொண்டாள் வெரோணிக்கம்மா. ஆனால் ஞானம்மா "ஐயோ இது வெரோணிக்காவின்ரை, இத்தாலியில் இருந்து வந்த பாலன்''என்று பாலனைக் கொஞ்சினாள்.

அந்த நேரம் பங்குத்தந்தை ஆறும்ஸ்தலம் விட்டுக் கல்வாரி மலை உச்சிக்குச் சென்றுவிட்டார் சிந்தனையில். அங்கே அவர் கண்டது கல்வாரிமலை உச்சிபோல் உயர்ந்திருந்த வெரோணிக்கம்மாவின் 'உயர்ந்த உள்ளம்'. அத்துடன் ஞானபமாக் குஞ்சாசசியின் கருத்துப்படி கட்டைச்சுவாமி என்றால் தலை நரைத்தவராக இருக்கவேண்டும் உவர் 'பெடியன் சுவாமி' உவருக்கு என்ன தெரியும் என்ற மனப்பான்மையையும் உணராமல் இல்லை, ஏனெனில் குருமடத்தில் உளவியலில் பேறெடுத்து வந்தவர் அவர்.

## கலை நிலா - கலை நிலா - கலை நிலா

# மீண்டும் திருப்பாடுகளின் காட்சி?

திருமறைக் கலாமன்றம் தற்பொழுது கலைத்துறைக்கு மீண்டும்பணி ஆற்றத்தொடங்கியிருப்பதனால் அதனது நடவடிக்கைகள் பற்றி அறிவதற்காக அதன் நாடகப் பிரிவு பொறுப்பாளர்களான திரு. அ. பிரான்சிஸ் ஜனம், திரு. கி. பி. பேர்மினஸ் ஆகியோரை அணுகினோம். அவர்களுடனான செவ்வி—இதோ:-

(பேட்டி கண்டவர்கள்:- திரு. மு. பு. ராஜன் — திரு. த. வ. அன்ரன்)

**மு. பு. ராஜன் :-** திரு. மறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் பலகாலமாக மங்கியிருந்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது. இதற்குரிய காரணம் யாது?

**கி பி, பேர்மினஸ் :-** உங்களுக்குத் தெரியும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை அதனகாரணமாக எமது தமிழ் பண்ணைல் சகல துறைகளும் ஸ்தம்பித்திருந்தன, இன்றும் உள்ளன. இதற்கு விதிவலக்காக நாங்கள் இருக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா? அத்துடன் எமது மன்றஇயக்குனரும் ஸ்தாபகருமாகிய அருள் திரு. N. M. சவிரிமுத்து அடிகள் அயல் நாடுகளுக்கு உயர் படிப்புக்காக சென்றிருந்ததும் ஒரு பகுதிக்காரணம்.

**த. வ அன்ரன் :-** தற்பொழுது இயங்கத்தொடங்கியிருக்கிறீர்களல்லவா? உங்களுடைய செயற்பாடுகள் எவ்விதம் அமையுமென்று கூறமுடியுமா?

**அ. பி. ஜனம்:-** மன்றத்தின் செயற்பாடுகள் பல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பகுதி பொறுப்பாக உள்ளது. நானும் திரு. கி. பி. பேர்மினசும் நாடகத்திற்கான எமது செயற்பாடுகள் பற்றி எம்மால் நன்றாக கூறமுடியும். நாடகம் ஓர் சமூகத் தொடர்பு சாதனம். அத்துடன் அது ஒரு பாடநெறியாக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் நாடகத்தோடு தொடர்புடைய கலைஞர்களுக்கு நாடக அரங்கம் சார்ந்த அறிவும் பயிற்சியும் மிகவும் அவசியமாகின்றது

**மு. பு. ராஜன் :-** இந்த அவசியமான பயிற்சிக்கு ஏதாவது செயல் வடிவம் உங்களிடம் உண்டா?

**கி. பி. பேர்மினஸ்:-** நாடக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து அதற்குரிய பயிற்சி நெறிகளை பிரதி ஞாயிறு தோறும் பிரதான விதியில் அமைந்துள்ள மறைக்கல்வி நடு நிலையத்தில் நாடக அரங்கக்கல்லூரியுடன் இணைத்து நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

**த. வ. அன்ரன்:-** இப்பயிற்சி அடிப்படையில் இதுவரையில் நாடகங்கள் ஏதாவது நடாத்திக் காட்டப்பட்டதுண்டா?

**அ பி. ஜனம :-** பயிற்சி நெறியே 22-1-89ல் தான் ஆரம்பமாகவிருக்கின்றது. இப்பயிற்சியில் ஒழுங்காக மன்ற விதிமுறைகளுக்கமைய பங்குபெறும் கலைஞர்களைக்கொண்டு பல்வேறு நாடகங்களை நடாத்திக்காட்ட திட்டமிட்டுள்ளோம். குறிப்பாக அண்மையில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி''யை மேடையேற்றுவதற்குரிய பூர்வாங்க ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

**மு. பு. ராஜன் -** இயேசுவின் வாழ்க்கை மாற்றமுடியாத சரித்திர நிகழ்வுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவிதமான மாற்றமும் செய்யாமல் நீங்கள் மேடையேற்றுவதால் மக்களிடம் ஏதாவது பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கின்றீர்களா?

**கி. பி. பேர்மினஸ்:-** சாதாரண நாடகத்திற்கும் இயேசுவின் திருப்பாடுகள்காட்சிக்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. சாதாரண நாடகம் மக்களின் ரசனைக்காக மேடையேற்றப்படுகின்றது. ஆனால் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி மக்களிடம் பக்தி உணர்வை ஏற்படுத்த மேடையேற்றப்படுகின்றது. மனிதவர்க்கம் மற்றவர்களின் துயரத்தின் பால் ஈர்க்கப்படுவது இயற்கையே. இயேசுவின் திருப்பாடுகள் துயரம் நிறைந்தவை. இத்துயரம் மக்கள் மனதை இலகுவாகப் பற்றிக்கொள்ளும். உலகத்தின் இலக்கியச் சிகரங்கள் பல துன்பியல் தன்மைவாய்ந்தவை. இயேசுவின் திருப்பாடுகள் அவலச் சுவையின் சிகரம் என்றே நான் கருதுகின்றேன். ஆகவே இயேசுவின் திருப்பாடுகள் காட்சியிலும் மாற்றம் அவசியமில்லையென்றே நான் எண்ணுகின்றேன்.

**த. வ அன்ரன்:-** சமீபத்தில் ''இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி' நடாத்திக்காண்பிக்க இருப்பதாக கூறுகிறீர்கள் இது எங்கு நடைபெறும் என்று கூறமுடியுமா?

**அ. பி. ஜனம்;-** நாங்கள் எதையும் பரவலாக சிந்திப்பது வழக்கம். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று. கிழக்கு மாகாணத்திலும் கொழும்பு மாநகரிலும் கூட மேடையேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்.

**மு.பு. ராஜன்:-** திருமறைக் கலாமன்றத்தின் மேடையேற்றங்கள் பிரமாண்டமான முறையில் அமைவது வழக்கம். உதாரணமாக 1971ம் ஆண்டு யாழ். கோட்டையில் நடந்த பாஸ்கா நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். நடைபெறவிருக்கும் திருப்பாடுகளின் காட்சியையும் நாம் அவ்வாறு எதிர்பார்க்கலாமா?

**கி. பி. பேர்மினஸ்:-** அந்தளவு பிரமாண்டமான மேடை நிகழ்வுகளை தற்கால சூழ்நிலையில் செய்வது சாத்தியமானது அல்ல. இருப்பினும் எமது வசதிக்கேற்றவிதத்தில் ஒருமேடை நிகழ்வாகப் பக்தி ரசனை குன்றாது மேடையேற்ற நாம் திட்டமிட்டுள்ளோம்.

(மிகுதி 7-ஆம் பக்கம்)

# இளைஞனே! நீ சிரிக்கின்றாயா ?

இளைஞனே! நீசிரிக்கின்றாயா? நீ சிரி நன்றாகச்சிரி. சிரித்துக் கொண்டேயிரு வாழ்வதற்கே சிரிப்பு சிரிப்பதற்கல்ல இளைஞனே! நீ சிரி வாழ்க்கை, ஆனால் உலகம் உன்னைச் சிரிக்கச் சிரிக்காதே. இன்றைய உலகிலே பலரும் பலவிதமாகச் சிரிக்கிறார்கள். தலைவனைப்பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள். முதலாளியைப் பார்த்து தொழிலாளிகள் சிரிக்கின்றார்கள். ஆசிரியரைப் பார்த்து மாணவர்கள் சிரிக்கின்றார்கள். மழலை தாயைப் பார்த்துச் சிரிக்கின்றது. காதலர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்கின்றார்கள. இவையனைத்தும் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பின் சிரிப்பு.

இன்னும் முதியோரைப் பார்த்து இளையோர் சிரிக்கின்றார்கள். நோயாளியைப் பார்த்து ஆரோக்கியமானவர்கள் சிரிக்கின்றார்கள் ஏழையைப்பார்த்துசெல்வந்தர் சிரிக்கின்றார்கள். இவையனைத்தும் கேலிச்சிரிப்பு என பெயர் பெற்றுள்ளது. சிரிப்பு என்பது ஒரு பொதுச் சொத்தாகும். அதைப்பயனுள்ள இடத்தில் பயன்படுத்த வேண்டிய வேளையில் பயன்படுத்த வேண்டிய முறையில் பயன்படுத்தினால் பலரும் பயனடைவார்கள்


ஆகவே இளைஞனே! சமூகத்திலே, குழுவிலே, குடும்பத்திலே நல்லவற்றைச் சிந்தித்துச் செயற்படுத்த நீயும் சிரி, மற்றவர்களையும் சிரிக்கவை.

வாழ்க்கை என்னும் பூங்காவிலே சிரிப்பு என்ற செடியில் தான் மகிழ்ச்சி என்னும் மலர் மலரும். மனிதன் முழுமையான மனிதனாக வாழ்வதற்கு சிரிப்பு அவசியமாகிறது

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே. எனவே இளைஞனே! நீ சிரிக்கின்றாயா?

சந்தியோகு பிரபா
உயிலங் குளம்

---




அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
20-1-1989

அன்பு இளம் உள்ளங்களுக்கு

''வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் வெள்ளையடித்த கல்லறைக்கு ஒப்பானவர்கள், அவை வெளியே மனிதருக்கு வனப்பாகத் தோன்றுகின்றன. உள்ளேயோ இறந்தோர் எலும்புகளும் எவ்வகை அசுத்தமும் நிறைந்துள்ளன''

— மத். 23: 27

உள்ளே அழுக்கு, வெளியே அழகு.

நேரில் கண்டதும் ''ஐயா வாருங்கள்'' என்று வணக்கத்துடன் வரவேற்றவர்கள் அவர் வெளியே சென்றதும் ''சனியன் தொலைஞ்சுது'' என்று முன்பின் முரணாக வாழும் மனிதர்களா நீங்கள்?

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## விவிலியம்

விவிலியத்தில் மொத்த அதிகாரங்கள் – 1334
விவிலியத்தில் மையப்பகுதி (அதிகாரம்) சங்கீதம் 137, 138
பழைய ஏற்பாட்டில் மையப்பகுதி (அதிகாரம்) சங்கீதம் 7, 8
விவிலியத்தில் நீண்ட புத்தகம் – சங்கீதம்
விவிலியத்தில் குறுகிய புத்தகம் – 2 அருளப்பர்
விவிலியத்தில் நீண்ட அதிகாரம் – சங்கீதம் 118
விவிலியத்தில் குறுகிய அதிகாரம் – சங்கீதம் 116
விவிலியத்தில் நீண்ட வசனம் – எஸ்தர் 8: 9
விவிலியத்தில் குறுகிய வசனம் – மத்தேயு 11: 15
புதிய ஏற்பாடு எழுதியோர் – 8 பேர்
புதிய ஏற்பாட்டில் மொத்த அதிகாரங்கள் – 260
புதிய ஏற்பாட்டில் மொத்த வசனங்கள் – 7972
புதிய ஏற்பாட்டில் மையப்பகுதி (வசனங்கள்)
— அப். பணி 7: 13, 14
புதிய ஏற்பாட்டில் நீண்ட அதிகாரம் – லூக். 1
புதிய ஏற்பாட்டில் குறுகிய அதிகாரம் — திருவெளி, 15.

செ. றொபின்சன் ஜோ
தாழையடி

---

## ரோஜாவும் பெண்ணும்

காண்போரை வசீகரிக்கும் தோற்றம் கொண்ட மென்மையான ரோஜா மலரானது, தம் அழகினால் கவரப்பட்டவர்கள் தம்மைப் பறிக்க வரும்போது முள்ளினால் 'நறுக்' எனக் குத்தி அவர்கள் விரல்களைப் பதம் பார்த்து விடுகிறது.

பெண்களும் தமது 'கற்பு' என்னும் அழகிய மலரைப் பறிகொடுக்காமல் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்பதற்கு இம் மலரே சிறந்த எடுத்துக்காட்டாய் இருக்கின்றதல்லவா?...

செல்வி. லூசியா சூசைப்பிள்ளை
யாழ்ப்பாணம்.

---

## புயலாகப் புறப்படு!

இளமைப்பருவம் இளைஞர் பருவம். துன்பத்தைக் கண்டு துவழாது துல்லியமாக எதிர் நோக்கும் பருவம். சொல்லரிய வேலைகளையும் செய்து விட வேண்டுமெனச் சொல்லுகின்ற பருவம். சரித்திர சபவங்களைச் சமைக்கின்ற பருவம் இந்த இளைய பருவம். ஏலாதது எதுவென்று ஏளனமாய்க் கேட்கின்ற இப்பருவத்திலே இளைஞர்களாகிய நாம் செய்ய வேண்டிய செயல்கள் தான் எத்தனை!

காமத்தில் கவிழ்ந்து தள்ளாடுவதும் இப்பருவத்திலேதான். சாதனைகள் பல புரிந்து சாதிக்கும் பருவமும்இதுதான். சோதனைகள் பலவந்து வேதனையைத் தந்து வீழ்த்துகின்ற காலமும் இதுவேயாம்.

''காற்றுள்ள போதே
தூற்றிக்கொள்''
''உள்ள சமயத்தில் உதவு''

ஆம். வீராப்போடு விரைந்தெழும் இப்பருவத்திலே இளைஞர்களாகிய நாம் சோதனைகள் பலவென்று சாதனைகள் பலவற்றை ஏற்படுத்துவோம்.

வீதிக்கொரு சாதியென்று பிதற்றுகின்ற பித்தர்களை புத்தம் புதிய மனிதராக மாற்ற ஏற்றமுடன் வீறுநடை போடுவோம்.

சீதனக் கொடுமையாலே சிதைவுறும் இதயங்களுக்கு சிதையேதான் முடிவென்ற முட்டாள்தனத்தை நீக்கி சீரான நல்வாழ்வை நல்கிட வழிசமைப்போம்.

காசுதான் கடவுள் என்று கத்துகின்ற கயவர்களின் கல்மனத்தைக்கசையடி கொடுத்து மென்மனமாக்குவோம்.

இவையெல்லாம் இளைஞனே உனது கடமையல்லவா? இனியும் நீ உன்னிரு கண்களையும் மூடிக்கொண்டு இருக்கலாமா? சொல்.

''அமைதியாய் இருந்தது
காணும்
அம்பாக விரைந்திடு
பூவாக இருந்ததுபோதும்
புயலாகப் புறப்படு''

—நெடுநகர் சுதா

---

## மெய்விவாகம்

ஆயர் உறுதிப்பூசுதல் கொடுக்க வந்தபோது ஒரு சிறிய பெண்ணைப் பார்த்து 'மெய்விவாகம் ஆவதென்ன' என்று கேட்டார்.

பெண்:'தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரியாத ஆத்துமங்கள்வேதனைப்படும் இடம் என்றாள்'

---




இறைவன் ஒரு குடும்பம்:

விவிலியத்தில் நாம் காணும் இறைவனும் தன்னை தந்தை, மகன், தூய ஆவி என்னும் ஒப்பற்றதொரு குடும்பமாக வெளிப்படுத்துகின்றார். மனிதனும் ஒரு பெருங்குடும்பமாக ஒன்றுபட்டு வாழ விழைகின்றார். மனிதனை அவர் தனி மனிதனாகப் படைக்கவில்லை. தனித்தன்மைகள் நிறைந்தவனாக–ஆணாக, பெண்ணாகப் படைக்கின்றார். ஆணும் பெண்ணும் இணைந்து இனிய குடும்ப வாழ்க்கை நடத்த வழிவகுக்கின்றார். (காண். ஆதியாகமம் 2: 24). குடும்பமாக இருக்கும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் சுலபமாக, சுதந்திரமாகக் குடும்ப வாழ்வை மேற்கொள்கின்றான். இதனால், இறைத் தன்மை (மூவொரு ஒன்றிப்பு) மனித குடும்பத்தில் காணக் கிடக்கின்றது. இறைவனின் திட்டம் இவ்வாறு மனிதனிலே நிறைவேறுகின்றது; நிறைவு கொள்கின்றது.

குடும்பம் ஒரு திருவருட்சாதனம்:

சமூகச் சாதனமாக திவ்விய குடும்பத்தைக் கிறிஸ்து ஓர் அரும்பெரும் அருட்சாதனமாக உயர்த்துகின்றார். திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவிலே புது உறவு ஏற்படுகின்றது இதனால் கிறிஸ்துவோடு உறவு கொண்டுள்ள ஓர் ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் என்ற உடன்படிக்கை செய்து கொள்ளும்பொழுது, இவ்விருவரும் ''கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை, வளம்மிக்க அன்பு ஆகிய மறைபொருட்களின் அறிகுறியாக நின்று அதில் பங்கு கொள்கின்றனர் (காண்: எபே. 5: 32) திருமண இணைப்பால் உருவாகிறது குடும்பம்; இக்குடும்பத்தில்தான் மனித சமுதாயத்தின் புதுக் குடிமக்கள் பிறக்கின்றனர்'' (காண்: சங்க ஏடுகள், திருச்சபை, எண் 11). இந்தக் குடும்பத்தையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் ''இல்லத் திருச்சபை'' (காண்: சங்க ஏடுகள், திருச்சபை, எண் 11). என்று அழைக்கின்றது. இதையே நான் ''குட்டித் திருச்சபை'' என்று குறிப்பிடுகின்றேன்.

குடும்பம் எனும் குட்டித்திருச்சபை:

குடும்பம் எனும் குட்டித்திருச்சபை கிறிஸ்தவம் என்னும் இறைக்குலத்தின் நாற்றங்கால். நாற்று பருவமற்றதாயின பயிர் செழிக்காது. பாதியிலேயே பட்டுவிடும். பண்பட்ட நாற்றுதான் பன்மடங்கு பலன் தரும். உழைப்பிற்கேற்ற விளைச்சலையும் கொடுக்கும்.

குடும்பத்தில் நிலவும் நிறைவான அன்பு, நிலையான ஒற்றுமை, இயல்பான உறவு, இயற்கையான ஒத்துழைப்பு, வளமான வாழ்வு இவற்றின் வழியாகவே கிறிஸ்தவம் என்னும் கடுகு விதை பெரிய மரமாகிறது.

குடும்ப வாழ்வே திருமறைத் திருப்பணியின் முதனிலைப் பருவம்.

குடும்பமே சமுதாயத்தின் கருப்பொருள்: உயிரணு! இதை இறைவனே குடும்பத்திற்குத் தந்துள்ளார் எனப் பார்த்தோம். குடும்பமாக வாழும் மக்கள், தாம் வாழ்கின்ற வாழ்க்கைச் சூழ்நிலைக்கேற்ப கிறிஸ்துவிற்குச் சான்று பகர்கின்றனர். இவ்வாறு அவை கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் திறம்படச் செய்து காட்டுகின்றன. குழந்தையின் உயிருக்காக தன் உயிரையே பணயம் வைக்கும் பாசமுள்ள தாய், தன் மகன் தன்னைவிட வசதியோடு இலகுவான சொகுசு வாழ்க்கை வாழ தன் ஆசைகளை அடியோடு மறந்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தந்தையரின் தியாகம், தன் தம்பியின் படிப்பிற்காகத் தம் எதிர்காலத்தையே மறந்து உழைக்கின்ற சகோதர சகோதரிகள், தம் பசியாற ஒருவேளை உணவில்லாதவர் கூட தம்மிடம் இருக்கின்ற கொஞ்சத்தையும் இல்லாதவரோடு பகிர்ந்து உண்கின்ற பரந்த மனப்பான்மை, இங்ஙனம் குடும்பமாக வாழ்பவர்கள் ஒருவருக்கொருவர் காட்டும் பாசம், பண்பு, பற்று, பரிவு இவற்றின் மூலம் கிறிஸ்துவின் அன்புப்பணி இவ்வுலகில் தொடர்கின்றது.

— அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை




திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் -9

### யோவேல்—1

'யோவேல்' என்ற சொல்லுக்கு 'ஆண்டவரே இறைவன்' என்று பொருள் யோவேல் பந்துவேல் என்பவரின் மகன். இவர் யூதாநாட்டைச் சேர்ந்தவர். யெருசலேமில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும். ஆலயவழிபாட்டு இறைவாக்கினராக இருந்திருக்க வேண்டும். ஆலயத்தையும் வழிபாட்டையும் நன்கு அறிந்திருக்கிருர் வழிபாட்டின் மட்டில் அதிக ஆர்வம் காட்டுகிருர். ஆலயப்பலியாளர்களையும் வழிபாட்டையும் பெரிதும் மதிக்கின்ருர். அன்றாடம் பலிகள் நடைபெற முடியாததைக்கண்டு மிகவும் வருந்துகிருர். இவற்றைக் கருத்தில் கொண்டு யோவேல் ஒரு குருவாக இருக்கலாம் என்று சிலர் கருதுவதும் உண்டு. யோவேல் சமூகத்தின் பிரதிநிதியாகவும் திகழ்ந்தார்.

யோவேல் ஆகமம் எப்போது எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியாது. இந்நூல் தோன்றிய காலத்தில் ஆட்சி செய்த அரசனைப்பற்றியோ, அரச மரபைப் பற்றியோ எத்தக்குறிப்பும் இல்லை. வடஅரசாகிய இஸ்ராயேல் மறைந்து விட்டதாகத் தெரிகிறது. யூதாவே இஸ்ராயேல் என்று அழைக்கப்படுகின்றது (2 : 27) கி. மு. 516 இல் கட்டிமுடிக்கப்பட்ட ஆலயம் மக்களின் சமய, சமூகவாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றது. யெருசலேம் மதில்கள் கட்டப்பட்டு விட்டன. இது நெகேமியா ஆளுநராக இருந்தபோது கட்டப்பட்டது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு யோவேல் ஆகமம் கி. மு. 400 – 350 க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கி. சா. பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 64

## உடன்படிக்கையின் பேழையே

புனித மரியாளின் மன்ருட்டு மாலையை செபிக்கும்போது "வாக்குத்தத்தத்தின் பேழையே" என்று மரியன்னையைப்புகழ்கின்ேறாம். இதன் பொருள் என்ன ஏன் இப்படி மரியாளை அழைக்கவேண்டும் என்று யோசித்தவேளை பேழையைப்பற்றிய கட்டுரைகளை எழுதும்போது ஏற்பட்ட கருத்துக்களை உங்களுடன் பகிர்தல் நல்லது என்று எழுதுகிறேன்.

உடன்படிக்கைப் பேழை சேத்திம் மரத்தினல் செய்யப்பட்டு உள்ளும் புறமும் பசும் பொன்னல் மூடப்பட்டது. (யாத் 25 : 10 ...) பேழையின் மேல் உள்ள இரக்கத்தின் அரியணையும் இரு புறமுள்ள கெருபிம்களும் பேழையை அழகு செய்தன (யாத் 25 : 7-9) வற்றை விடப்பேழையில் உள்ள பொருட்கள் தான பேழையை மதிப்புள்ளதாக்கியது. உள்ளே மன்ன உடன்படிக்கை கற்பலகை ஆரோனின் மலர்ந்த கோல்வைக்கப்பட்டுள்ளன (எபி 9 : 4). இந்த பேழை இஸ்ராயேல் மக்களிடையே இறைபிரசன்னத்தைக் குறிப்பதாக இருந்தது.

சேத்திம் மரம் பூச்சிகளால் அரிக்கப்பட்டுக் கெட்டுப்போகாதது. மரியாளும் சென்மபாவக் கறையின்றிக் கருவிலே உருவாகி தூயவளாக பாவ மாசின்றி வாழ்ந்தாள் அலகையின் ஆட்சி அவளைப் பாதிக்கவில்லை. அவளது உடல்கூட மண்ணுக்கு இரையாகாது காப்பாற்றப்பட்டது பேழையின் உள்ளும் புறமும் பொன்தகட்டால் மூடப்பட்டு அழகுபடுத்தப்பட்டதுபோல். மரியாள் புண்ணியங்களால் நிரப்பப்படடாள் "அருள் நிறைந்தவள் (லூக் 1 28) அக அழகுடையவளான மரியாள் புற அழகுமுடையவளாகத் தான் இருந்திருக்கவேண்டும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே.

பேழையில் இருந்த பொருட்களில் ஒன்று "மன்ன". இது பாலையில் பசியால் வாடிய மக்களுக்கு பசிபோக்கிய இறைவன் கொடுத்த வானத்து உணவு. மரியாளின் வயிற்றில் வாழ்வளிக்கும் உயிர்உள்ளஉணவான (அரு 6 : 51) யேசு இருந்தார். சீனய் மலை உடன்படிக்கை கற்பலகை பேழையில் இருந்தது. புதிய உடன்படிக்கையான அன்புக்கட்டளை கொடுத்த யேசு மரியாளின் வயிற்றிலிருந்தார். பேழையினுள் பழைய ஏற்பாட்டில் குருத்துவத்தை உறுதி செய்யும் ஆரோனின் மலர்ந்தகோல் வைக்கப்பட்டிருந்தது. நித்திய குருவாகிய (எபிரே 7 : 24) யேசு மரியாளின் வயிற்றிலிருந்தார்.

பெட்டகத்தின் மேல் உள்ள இரக்கத்தின் அரியணையும் கெருபிம்களும் மரியாள் விண்ணக மண்ணக அரசி என்பதையும் வானதூதரும் புகழும்பேறுபெற்றவள் என்பதைக்குறிக்கின்றன. எனவே தான் இத்தனைபெருமையுடைய மரியாளை புதிய ஏற்பாட்டின்பேழை என்று மறை அறிஞர்கள் அழைக்கிருர்கள்.

— இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

நமது முன்னேரின் புதுமொழி இரண்டைக் கேட்டுப் பாருங்களேன்.

"நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது குப்பைக் குழிக்குள் தான் போகும்"

"பாலூற்றி வைத்தாலும் பாம்பின் விஷம் போகுமா?

உண்மைதானே! நாங்கள் நல்லவர்கள்- நம்பியவர்கள்- என்று யாரை நினைக்கிருேமோ அவர்களே எம் காலை வாரி நடுத்தெருவில் விடவில்லையா? முன்னேரின் முதுமொழியை அறியாத நாம் அனேக தடவைகளிலே ஏமாற்றப்பட்டு நம்பிக்கெடுகின்ருேம்!

இதற்கு ப. மொ. ஆ. 11/21 அழகாக தெளிவாக உரைக்கிருர் "கைக்குள் கை வைத்தாலும்- தீயோன் குற்றமற்றவனய் இரான்" என்று! இது நம்மவரை சிந்திக்க வைக்கிறதில்லையா?

இன்னென்றையும் சொல்லித்தரவா?

இதற்கு ப. மொ. ஆ. 11 / 22 ல் "மதியில்லாத பெண்ணின் அழகு- பன்றியின் மூக்கிலுள்ள பொன்வளையம் போலிருக்கும்" என்பதற்குப் பட்டென்று பதில் சொல்கிருர் நம்மவர்.

"கட்ட விளக்கு மாற்றிற்கு பட்டுக்குஞ்சமென்று" இது எப்படி இருக்கின்றது?

இயேசு பிரான் கூறுகிருர் "சின்னஞ்சிறிய இவர்களுக்குச் செய்தபோதெல்லாம் எமக்கே செய்தீர்கள்" என்று. இன்று, நமது நாட்டிலே எங்கு பார்த்தாலும், சோக முகங்களையும்- சோர்வற்ற மனிதர்களையும், காண்கின்ருேம் 'கிறிஸ்தவம்' என்பது பகிர்தலில் தானே அடங்கியுள்ளது

இதைச் சுருக்கமாகக் கூறினுர்கள் முன்னேர்

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தல் தன்பிள்ளை தானே வளரும்? அயலவர் வீட்டில் அக்கறை கொள்ளவேண்டுமென்பதை ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டும் இறைவார்த்தை கூறுவது.

"நன்மையை நாடுகின்ற ஆன்மா நிறைவுபெறும் மற்றவர்களைப்பூரிக்கச் செய்கிறவன் தானும் பூரிப்படைவான்" என்று 11 / 25 ல் வேதாகமம் கூறுகின்றது.

'கிறிஸ்தவம்' என்ற பதத்திற்கு இந்நவநம் கூறிய ஆணித்தரமான அர்த்தத்தைக் கண்டு கொண்டீர்கள் தானே.

இன்று எங்கு பார்த்தாலும் பெண்களின் விடுதலை- அவர்களின் அடக்க ஒடுக்கம் பற்றித் தானே பேசப்படுகின்றது. பாரதிகூட "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்று வீராப்பாகப் பேசுகிருர்.

நமது திருநூலும், 12 / 4 ல் "சுறுசுறுப்புள்ள மனைவி தன் கணவருக்கு ஒரு முடியாம்- அவமானத்திற்குரிய காரியங்களைச் செய்கிறவளோ அவனுடைய எலும்புகள் அழுகிப் போகும்படி செய்வாள்" என்கிறது.

உங்கள் அன்பன்,
எஸ். ஏ. நாதர்.




| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 3 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

பாடுங்கள்... பாட்டுப் பாடுங்கள்:

### என்னைத் தெரியுமா ?

ஆறுங் குளமும் என்வீடு
ஆழக் கடலும் என்வீடு
வேருேர் உருவம் பெற்றவுடன்
விண்ணிற் கேகும் பேறுடையேன்.

வாழும் உலகம் என்னுலே
வளமும் புகழும் என்னுலே
பாழும் பஞ்சப் பிணியெல்லாம்
பாரில் ஒழியும் என்னுலே

உள்ளங் குளிரச் செய்திடுவேன்
உஷ்ணந் தணியச் செய்திடுவேன்
வெள்ளம் பெருகச் செய்திடுவேன்
விளைவும் பெருகச் செய்திடுவேன்.

உலகின் பயிர்கள் என் செல்வம்
உயிர்கள் யாவும் என் செல்வம்
புலவர் என்னை அமிழ் தென்பார்
புதல்வா ! என்னைத் தெரிகிறதா ?

பாடலை இயற்றியவர்: யாழ். ஜெயம்

### வாரம் ஒரு வார்த்தை:

என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான்.

அரு. 6: 12

### உன்னிடம் ஒரு ?

உன்னிடம் ஒரு பிறசமய நண்பன் "நீங்கள் வணங்கும் இயேசு, ஒரு கள்வனைப் போல் சிலுவையிலே அறையுண்டு, அரை நிர்வாணமாக மானமின்றித் தொங்குகிருரே! ஏன்?" என்று கேட்டால்...

கதையைப் படியும் பதில் வரும்.

தாயை இழந்த யூலியன் தந்தையின் அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்து வந்தான். தந்தை தன்னை நொருக்கித் தனயனைக் கண்போல் காத்து வந்தார்.

வெள்ளியன்று 3 மணியாகியும் யூலியன் கல்லூரியிலிருந்து வீடு திரும்பவில்லை. தந்தை மகனைக் காணுது தவியாய் தவித்துப்போனர். மகனைத் தேடிக் கொண்டு கல்லூரி நோக்கி விரைந்தார். வீதியில் யூலியனுடன் படிக்கும் நிரஞ்சனைக் கண்டு யூலியன் எங்கே? என்று கேட்க "மாமா. யூலியன் தான் வீட்டுக்குப் போகவில்லை என அழுது கொண்டு கல்லூரியில் நிற்கிருர்," என்ருன்

தந்தை கல்லூரி நோக்கி ஓடோடிச் சென்ருர் தந்தையைக் கண்ட யூலியன் 'அப்பா, நீ அழகற்றவன் உன் முகம் அவலட்சணமானது என என் நண்பர்கள் கேலி செய்கிருர்கள். உன்னை என் அப்பா என்று சொல்ல வெட்கமாக இருக்கு, ஏன் அப்பா உன்னை இறைவன் அழகற்றவனைப் படைத்தார்," என்று கத்தினன்

தந்தை கண்ணீர் மல்க, "மகனே! இறைவன் என்னை அழகுடன்தான் படைத்தார் நீ கைக்குழந்தையாய் இருக்கையில் உன்னை நான் ஏணையில் படுக்கவைத்துவிட்டுப் பக்கத்து வீட்டில் வேலை செய்து கொண்டு இருக்கையில் எமது குடிசை தீப்பற்றி எரிந்தது. அவ்வேளை உன்னைத் தீயிலிருந்து காப்பாற்றிய என் முகத்தை தீ தீண்டியது. அதனுல் ஏற்பட்ட அவலட்சணம்தான் மகனே! இந்த முகம்," என்று கூறியதைக் கேட்ட யூலியன் "அப்பா, அப்பா," என்று கத்தியபடியே தந்தையைக் கட்டி முத்தமிட்டான்.

கதை தந்தவர்: செ. எயின்சிலி றெஷான்
அங்க. எண்: A/2.

கண்மணிகளே! பதில் உங்கள் உள்ளத்தில்.
உதித்ததா? உதித்தபதிலை எழுதி அனுப்புங்கள்.
தரங் கண்டு பிரசுரிக்கிறேன்.

அன்பின்
அன்பு விழி.

# கலை நிலா....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த. வ. அன்ரன்: சமீபகாலத்தில் வட்டக்களரி முறையில் சில மேடை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவ்வாறான முறையில் இந்நாடகத்தை மேடை யேற்றும் திட்டம் ஏதும் உண்டா?

அ. பி. ஜனம்:- தற்பொழுது யாழ்ப்பாணத்தில் அவ்வாறான முறையில் நாடகங்கள் நடைபெறுவது இல்லை. அது ஒரு பழைய நாடக மரபு. பரீட்சார்த்தமாக அப்படியான நாடக மேடையேற்றங்களை நாம் செய்து காட்டுவதற்கு எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றுவது சம்பந்தமாக நாம் கொண்டிருக்கின்ற நோக்கம் ''வட்டக்களரி'' முறையில் செயல்வடிவம் பெறுது என்றே நாம் எண்ணுகின்றோம்.

மு. பு. ராஜன்:- நீங்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ நாடகங்களையே மேடையேற்றுகின்றீர்கள். இது ஒரு விதத்தில் மறைபரப்பும் செயல் என்று கூறலாம். இதற்கு திருச்சபை மட்டத்தில் ஊக்கமளிக்கப் படுகின்றதா.

இ. பி. பேமினஸ்:- திருச்சபையின் ஆதரவின்றி நாம் இவ்வகையான மேடை நிகழ்வுகளை மேடையேற்ற முடியாது. எமக்கு நிறைய ஆதரவு உண்டு. குறிப்பாக யாழ். ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள் என்றும் நமக்கு உறுதுணையாக இருக்கின்றார். அத்துடன் ஏனைய குருக்கள், கன்னியர் பலரும் நமக்கு ஆதரவாக இருக்கின்றார்கள்.

த. வ. அன்ரன்:- இப்படியான பெரிய மேடையேற்றங்களுக்கு அதிக செலவு ஏற்படுவது இயல்பு. இதற்கான செலவினங்களை நீங்கள் எவ்வாறு ஈடுசெய்கின்றீர்கள்.

அ. பி. ஜனம்:- பெரிய மேடையேற்றங்களுக்கான செலவினங்களை ஈடு செய்வதற்குரிய பொருளாதார நிலையல் மன்றம இருந்ததுமில்லை ஆப்போதும் இல்லை. ஆனால் இம மேடையேற்றங்கள எப்பகுதியில் நிகழ்கின்றதோ அப்பகுதி மக்களதான் அச்செலவினங்களை ஏற்றுக்கொள்கின்றார்கள். அவ்வாறான ஒத்துழைப்பு கிடைக்கும் பகுதிகளில் தான் நமது மேடையேற்றங்களை நிகழத்த நம்மால் முடியும்.

மு. பு. ராஜன்:- உங்களுடைய கடந்தகால மேடையேற்றங்களில் உங்களுக்கு பெருமை தேடித்தந்த நிகழ்வுகள் பற்றி உங்களால் குறிப்பிட முடியுமா?

இ. பி. பேமினஸ்:-

சாதனைக்காரர் இந்த பாதர்'' என்று அடைமொழியுடன் பத்திரிகைகளால அழைக்கப்பட்ட வண. பிதா N. M. சவரிமுத்து அவர்களின் உருவாக்கலில் அமைந்த எல்லா நாடகங்களும், விசேடமானவை தான. எமது 'களங்கம்' நாடகத்தில் பிரதான பாத்திரத்தை மேடையில் காட்டாமலேயே தற்போதய நவீன நாடக உத்திகளுடன் மேடையேற்றியிருக்கின்றோம்.

அக்கால கட்டத்தில் (1968) அந்நாடகத்தைப் பாராட்டியோர் பலர். அதேபோன்று 1971 ம் ஆண்டு நம்மால் நடத்திக் காட்டப்பட்ட ''அன்பில் மலர்ந்த அமரகாவியம்'' 300 அடி நீள மேடையில் 300க்கு மேற்பட்ட கலைஞர்கள் ஒத்துழைப்புடன் இதுவும் எமக்கு பெருமையை தேடித் தந்தது. இன்னும் இந்தியாவில் திருச்சி தேவர் அரங்கில் நம்மால் மேடையேற்றப்பட்ட ''பலிக்களம்'' நாடகத்தையும் குறிப்பிடலாம். நவீன சாதனங்கள் எதுவும் இல்லாமல் பல வருடங்களுக்கு முன்னரே ''பலிக்களம்'' எனும் நாடகத்தை தொலைக்காட்சி படமாக்கி முதல் முதலாக மக்கள் முன் வெளியிட்ட பெருமையும் எமக்கு உண்டு.

## எழுதிச் செபியுங்கள் போட்டி—20

''சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்பட'' ஒரு செபம் தெளிவாக எழுதி 15-2-89-க்கு முன் பாதுகாவலன், தபாற் பெட்டி இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 25/-

அடுத்த போட்டியும் பரிசுபெறுபவர் பெயரும் 24-2-89 பாதுகாவலனில் வெளிவரும்.

### பரிசு பெறும் செபம்

### சுதந்திரமான நேர்மையான தேர்தல் இடம் பெற

அன்பான இறைவா! இன்று நீதியுடனான சமாதானத்திற்காக ஏங்கி நிற்கும் தமிழ் இனத்தைக் கண்ணோக்கிப் பாரும். பல்வேறுபட்ட இன்னல்களுக்கு ஆளாகி வந்த அனைவரும் உமது இரக்கத்தினால் ஆறுதலைப் பெற்றிருக்கின்றார்கள்.

ஜனநாயகம் என்பது வெறும் வார்த்தையாக மாறிவரும் இக்கால கட்டத்தில் மக்கள் தேர்தல் என்ற ஒரு நிலையைப் பெற்றிருக்கின்றார்கள். தமது உரிமையினை வென்றெடுக்க காத்திருக்கின்ற மக்களை உமது கருணையால் நிரப்பியருளும். அவர்களின் துயர் போக்க, இடர் நீக்க புதுவாழ்வு வழங்க ஒரு நீதியான அரசை அளித்தருளும். அந்த அரசை அனைவரும் காண தேர்தல் என்ற இந்நிலையினூடாக எம்மை வழிநடத்தியருளும். இந்த தேர்தல் சுதந்திரமான நேர்மையான முறையில் நடைபெற நாட்டு மக்கள் என்ற உணர்வோடு சிறந்த தலைவர்களை வழிகாட்டிகளைத் தெரிந்தெடுக்க ஆவியின் கொடைகளைப் பொழிந்தருளும். நீதிக்கும், நேர்மைக்கும், சுதந்திரத்திற்கும் குரல் கொடுத்த அனைவரினதும் ஆவலை நிறைவேற்றியருளும். நீதியின் மூலம் வாழ்வு வழங்கிய வள்ளலே உமது அன்பால் அனைவரையும் நிரப்பித் தேர்தல் வழியாக புதுவாழ்வு பெற அருட்கொடைகளைப் பொழிந்தருளும். தேர்தல் ஊடாக நாட்டில் நீடித்த சமாதானமும், ஒற்றுமையும் நிலவ அதனால் மக்கள் வளமுடன் வாழ வகை செய்தருளும் இறைவா! நாடு அமைதி பெறச் செய்தருளும். ஆமென்.

பரிசு பெறும் நற்பேறுளர்:

அ. மோசேஸ் புனித லூர்துமாதா கோவிலடி, தும்பளை, பருத்தித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்:

1. செல்வி செலஸ்ரீன் புங்குடுதீவு—10
2. P. ஆனந்தி, 10-ம் வட்டாரம் புங்குடுதீவு.
3. எம். டி. ஞானப்பிரகாசம், தென்மூலை, அச்சுவேலி.
4. இராசேந்திரம் யெலின்சலா, அந்திரான் சண்டிலிப்பாய்.
5. வி. மேரி பற்றீசியா. பாலைக்குளி அடம்பன், மன்னார்.
6. ரி. செபமாலைநாயகம், சென்மேரிஸ் சேச் லேன், கோப்பாய்.
7. யோ. கிறிஸ்ரி பிரான்சிஸ், சென் யேம்ஸ், இளவாலை.
8. செல்வி. நிர்மலா டேவிற், சென் யேம்ஸ், இளவாலை.
9. செல்வி. தே. ஜோண் பாமினி, மயிலிட்டி.
10. ப. நொய்லின் ஜெனிற்ரு, 2-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
11. க. சூசைப்பிள்ளை வயிலெற், 4-ம் வட்டாரம் மண்டைதீவு.
12. ஜெகான் நீக்கிலஸ், சுண்டிக்குளி, யாழ்.
13. பா. றெறினுக் காந்தினி, அல்லைப்பிட்டி.
14. இ. றமா. 20/2, சென் யேம்ஸ் மேற்கு, குருநகர்.
15. லெற்றீஷியா தைரியநாதர், கைத்தொழிற் பேட்டைவீதி, அச்சுவேலி.
16. வினிஷியா சுறேந்தினி, ஆரோக்கியநாதன், தி. கு. க. மடம், யாழ்ப்பாணம்.

## கோரிக்கை தினம்

இவ்வாண்டுக்குரிய ம. துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்க தினம் சங்க ஊழியர்களினாலும், செயற்குழு உறுப்பினர்களினாலும் 29-12-88 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

அன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள தாய் தந்தை அற்ற 95க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு வருடாந்த கோரிக்கை தினமாக கொண்டாடப்பட்டது. இச்சிறுர்கள் அன்றைய தினம் வரவேற்கப்பட்டு அவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள், சீருடைகள், உடுபுடவைகள், உணவுப்பண்டங்கள் போன்றன வழங்கப்பட்டன.

இதற்கு மன்னார் பொது மக்களிடமிருந்து பொதுஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளை செயலாளர் எதிர்பார்க்கின்றார். கருணை உள்ளம்கொண்டோர் நத்தார், வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற திருவிழாக் காலங்களில், தாய், தந்தை அற்ற குறிப்பாக இனக் கலவரத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவ முன்வந்தனர்.

இவ்வைபவத்துக்கு பலமத பிரதிநிதிகளும் மன்னார் ஆயர் அரசாங்க அதிபர், சிறுவர் பராமரிப்பு நிதியத் தலைவர் போன்றோர் கலந்துகொண்டனர் பெற்றோரை இழந்த இவ் அன்பு உள்ளங்களின் மகிழ்ச்சியில் பங்குபெற விரும்புவோர் பணமாகவோ, பொருளாகவோ தந்து உதவுமாறு கேட்கப் படுகின்றனர்.

## இலவசம்

சென்ற ஆண்டு வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகைகளைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் அவற்றை எமது அச்சகத்திற்குக் கொண்டுவந்து இலவசமாக ஒரு புத்தகமாகக் கட்டிச் செல்லலாம். ஆ—ர்.

### செபத்தில் நினைப்போம்
### 31-ம் நாள் ஞாபகம்
### 24-01-89



மேரி தங்கம்மா இராஜசிங்கம்

பிறப்பு: 06-01-1916 இறப்பு: 25-12-88

வல்லமையும் அன்பும் நிறைந்த தந்தையே இவ்வுலக வாழ்வை முடித்து, தன் விசுவாசத்தின் பயன், வேண்டி நிற்கும் உம் அடியாள் மேரி தங்கம்மாவிற்கு உமது நித்திய இன்பத்தில் இடம் தரவேண்டுமென்று, ஒரு மனத்தவராய் மன்றாடுகின்றோம். ஆமென்.

ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி வசாவிளான் உத்தரிய மாதா கோவிலில் 24-01-89 காலை 6-30 மணிக்கு நிறைவேற்றப்படும்.

சுவாமி பீற்றர் துரைரத்தினம்

A/10

### விண்ணொளியில் ஓராண்டு



அல்வின் துரைசிங்கம்

ஆண்டவன் படைப்பு: 01-03-1937. ஆண்டவன் அழைப்பு: 27-01-88.

தரணியர்க் கெல்லாம் தந்தையே இறைவா,

உமது அடியான் அல்வின் துரைசிங்கத்தை உம்மிடம் அழைத்துக்கொண்டு விட்டீர். எம்மைத் தவிக்க விட்டுவிட்டீர்

அவரது வாழ்க்கைக்காக நன்றி. அவரை உம் பேரொளியில் இணைத்தருளும்.

நிரப்ப முடியாத இந்த வெற்றிடத்தை உமது அருளாலே ஈடு செய்தருளும்; அருகிருந்து எம்மை வழி நடத்தும். ஆமென்.

அன்பு மனைவி, அருமை பிள்ளைகள். உற்றார் உறவினர்.

சென். யேம்ஸ் வீதி, ஊர்காவற்றுறை.




(1) ஜன. 24: புனித பிரான்சிஸ்கு சலேசியார்: புனிதர் பிரான்சின் தென்கிழக்குப் பகுதியான சவோ மாவட்டத்தில் 1567 ம் ஆண்டு பிறந்து, குருவாகி, ஜெனவாவின் ஆயராக உயிர்த்தப்பெற்றார். 1622 ஆம் ஆண்டு டிசம்பர் 28-ம் திகதி லயன்ஸ்நகரில் புனிதர் மரணமானார். இவர் 1623 ம் ஆண்டு ஜனவரி 24 அடக்கம் செய்யப்பட்டு, 1665ம் ஆண்டில் புனிதரானார்.

(2) ஜன. 26: புனித திமோத்தேயுவும், தீத்துவும்: திமோத்தேயு, தீத்து இருவரும் புனித சின்னப்பரின் சீடர்களும் உடன் ஊழியர்களுமாவர். இருவரும் எபேசு, கிரேத்து எனும் திருச்சபைகளை முறையே கண்காணித்தனர்.

(3) ஜன. 27: புனித மெரிசி ஆஞ்சலம்மாள்: புனிதை வெனிஸிஸ் தெசன்சானோ எனுமிடத்தில் ஏறத்தாழ 1470 ஆம் ஆண்டு தோன்றினாள். இவ்வம்மையார் 1540 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி பிரிக்சியாவில் மரித்தார். 1807 ஆம் ஆண்டு புனிதர் பட்டம் பெற்றார்.

(4) ஜன. 28: புனித அக்குயினாஸ் தோமையார்: புனிதர் ஏறத்தாழ 1225 ம் ஆண்டு அக்குயினாஸ் என்ற உயிர்குடியில் பிறந்தார். புனிதர் மாவென்சாவுக் சருகில் உள்ள வெஸ்ஸா நோவாவில் 1274 ஆம் ஆண்டு மார்ச்சு 7 ம் நாள் மரித்து, 1323 ஆம் ஆண்டு புனிதராக உயர்த்தப்பட்டார்.

செல்வன்: எஸ் ஏ. குமார்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# நோயாளர்களுக்கும், அனாதைச் சிறுவர்களுக்கும் ம. து. ம. சங்கத்தின் உதவி

கடந்த 23 ந் திகதி மன்னார் துயர் துடைப்பு மறு வாழ்வுச் சங்கமும், சிறுவர் பராமரிப்பு நிதியமும் இணைந்து மன்னார் ஆதார வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களைச் சந்தித்து நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், சிறுவர் பகுதி, காச நோயாளர் பகுதியிலுள்ள நோயாளர்களுக்கு பரிசுப் பொருட்களையும் வழங்கினர்.

சிறுவர்களின் மத்தியில் உரையாற்றிய சங்கத் தலைவர் வண. அ. சேவியர் குருஸ் அடிகளார் "சகல சாதி இன மக்களுக்கும் கிறிஸ்துநாதர் சொந்தமானவர் என்றும், குறிப்பாக கஷ்டப்படுபவர்கள், சிறையில் உள்ளோர், வைத்தியசாலையில் உள்ள நோயாளர் மத்தியில் என்றும் சீவித்து வருகிறார் என்றும், உங்களில் பலர் திருவிழாக் காலங்களில் வீடுகளுக்கு செல்ல முடியாமல் நோயினிமித்தம் தங்கியிருக்கிறீர்கள், உங்களை மகிழ்ச்சிப்படுத்தவே நாம் புனித செபஸ்தியார் பூசைப் பரிசாரகர் பாடகர் குழாமுடன் இங்கு வந்துள்ளோம்" எனக்கூறினார்.

மேற்படி நிகழ்ச்சியை ம. து. ம. ச. வைத்திய அதிகாரியுமான கலாநிதி நிரஞ்சன் அவர்களும், ம. து. ம. ச செயலாளர் திரு. சின்கிளேயர் பீற்றர் அவர்களும் ஏற்பாடு செய்து இருந்தனர்.

இவ் வைபவத்திற்கு சங்கத்தைச் சேர்ந்த சகல இன மக்களும் பிரசன்னமாகி இருந்தனர். மேலும் கடந்த 29-ந் திகதி ஆயர் தலைமையில் மாவட்டத்திலுள்ள பெற்றோரை இழந்த பிள்ளைகள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுப்பொருட்களும், மதிய உணவும் வழங்கப்பட்டது. இப்படியாக 80 க்கும் அதிகமான தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் பரிசுப் பொருட்களை ஆயரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். சங்கத்தைச் சேர்ந்த திரு. ஏ பி பிகுராடோ, திரு. எஸ். இராமகிருஷ்ணன் போன்றோர் இவ்வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தனர். மேற்படி வைபவம் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

சிறார்கள் மத்தியில் உரையாற்றிய மன்னார் ஆயர், தாயும், தந்தையுமாக இச் சங்கம் உங்களுக்கு இன்று நிலவி வருகிறது என்றும், பெற்றோர்களை இழந்த நீங்கள் உங்கள் பாதுகாவலர் மத்தியில் நல்லொழுக்கத்துடன் வளர வேண்டும் எனவும், விரக்தி மனப்பான்மையைக் கைவிட்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றும், உங்களின் வளர்ச்சியில் இச் சங்கமும் குறிப்பாக, தானும் பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாகவும் ஆறுதல் வார்த்தை கூறினார்.

சிறுவர் பராமரிப்பு நிதியத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஸ்டான்லி அவர்கள் உரையாற்றுகையில் இச்சிறுவர்களின் பாதுகாவலரின் பொறுப்புக்களை நன்கு எடுத்துரைத்தார்.

மேற்படி இரு நிகழ்ச்சிகளுக்கும் கொழும்பு சிறுவர் பராமரிப்பு நிதியத்தைச் சேர்ந்த திரு டேவிட் லோக்கர் நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செயலாளர்
ம து. ம. ச.

# சுவீகாரம் வர்த்தகரீதியாக மாறக்கூடாது — அன்னை திரேசா

இந்திய சமூக நல சங்கத்தின் மேற்கு வங்கக் கிளை குழந்தைகளை சுவீகாரம் எடுப்பது பற்றி ஓர் கருத்தரங்கை அக்டோபர் 8-ம் 9-ம் திகதிகளில் நடத்தியது. அதன் பிரதம அதிதியாக இருந்தவர் அன்னை திரேசா.

அன்னை திரேசா தமது உரையில் சமூக சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் சுவீகாரம் வர்த்தகரீதியாக மாற விடக்கூடாது எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் "பிள்ளைப்பேற்றைத் தடுக்க ஏதாகிலும் செய்தவர்களுக்கு நான் ஒருபோதும் பிள்ளைகளை சுவீகாரம் கொடுப்பதில்லை. ஏனெனில் அவர்களால் அப்பிள்ளைக்குப் போதிய அன்பு செலுத்த முடியாது. ஏழைப் பிள்ளைகள் குடும்ப வாழ்வையும் அன்பையும் அனுபவிப்பதற்கு சுவீகாரம் வழிசெய்கிறது. இதனால் எதிர்காலத்தில் அவர்கள் பிரதி அன்பு செலுத்தவும் கற்றுக் கொள்கிறார்கள்" என்று கூறினார்.

அன்னை திரேசாவின் சபையினர் உலகில் 190 இடங்களில் பணி புரிகிறார்கள். சுமார் 80,000 குடும்பங்களுக்கு தினசரி உணவளிப்பதுடன் 14,000 பிள்ளைகளுக்கு 97 பாடசாலைகளில் கல்வி பயிற்றி வருகிறார்கள்.

# இரு கியூறியாக்களின் ஆண்டுவிழா

இளவாலை மறைவட்டாரத்தில் இயங்கிவரும் மரியன்னை சேனையின், இளைஞர் வளர்ந்தோருக்கான இரு கியூறியாக்களின் இருபது பிரெசீடியங்களும் இணைந்து, சென்ற 10-12-88 அன்று தமது ஆண்டு விழாவினை அதி விமரிசையாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

சேனை எனும் குடும்பத்தின் உறுப்பினர்களிடையே, ஒற்றுமையையும் நட்புறவையும் வளர்க்கும் நோக்கத்துடன் வருடந்தோறும் நடத்தப்படும் இவ் விழாவிற்கு அன்றைய தினம், இளவாலை, மறை வட்டாரப் பங்குத் தளங்களான, சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பெரியவிளான், மாகியப்பிட்டி இளவாலை மாரீசன் கூடல் ஆதியாம் இடங்களிலிருந்துவந்த இரு நூற்றுக்கு மேற்பட்ட சேனையார் 10-12-88 காலை 9 மணியளவில், இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் அணி சேர்ந்ததும், ஆரம்ப செபம், செப மாலையுடன் விழா ஆரம்பமானது

இளவாலைப் பங்குத் தந்தையர் அருள்திரு மைக்கல் T. பற்றிக் அடிகளார் திருப்பலி நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில், அலங்கரிக்கப்பட்ட அன்னை மரியின் பீடத்தண்டையில் அனைத்து சேனையாளரும் ஒன்று கூடலாயினர். அருள்திரு கலாநிதி யவரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில், கியூறியா ஆன்ம இயக்குநர் அருள் தந்தை பிரான்சிஸ் பொனிபஸ் அடிகளார், இளவாலை மாரீசன் கூடல் பங்குத் தந்தையர்கள் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பித்த இப்பொதுக்கூட்டத்தினை, வளர்ந்தோர் கியூறியாத் தலைவர் திருவாளர் N. இராயப்பு அவர்கள் தமது வரவேற்புரையுடன் ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்புரையினைத் தொடர்ந்து, அன்னார் வாசித்தளித்த, சேனையாரின் வருடாந்த ஊழிய விபரத்திரட்டு யாவர்க்கும் மகிழ்ச்சி தருவதாயிருந்தது சிறப்புரை வழங்கிய கியூறியா ஆன்ம இயக்குநர் அவர்கள் சேனையாரின் சிறந்த சேவைகளைப் பாராட்டி, பங்குத் தந்தையர் அனைவரதும் சார்பில் தமது உளமகிழ்வையும் நன்றியையும் தெரிவித்தார். இளவாலை புனித அன்னம்மாள் ஆலய, பெண்கள் இளைஞர் பிரெசீடியம் உவந்தளித்த 'பட்டாடை" எனும் நாடகத்தினை யாவரும் பாராட்டி நன்றி கூறினர்.

ஈற்றில் கியூறியாச் செயலர் அவர்களின் நன்றியுரை, அருள் தந்தையர்களின் ஆசீர் என்பவற்றுடன் விழா இனிதே நிறைவுற்றது.

தகவல்: அன்னைமரி சேனையார்
அன்னாள் ஆலயம், இளவாலை

# தினமும் 80,000 குடும்பங்களுக்கு அன்னதானம்

'றீடேர்ஸ் டைஜஸ்ற்' சஞ்சிகையில் அன்னை திரேசாவின் பணிபற்றிய விளக்கமான கட்டுரையொன்று அண்மையில் வெளிவந்தது. அதில் தரப்பட்டுள்ள விபரங்களின்படி அன்பு மிஷனறிகள் சபை உலகில் 190 இடங்களில் 80,000 குடும்பங்களுக்கு உணவளிக்கிறது. அவர்கள் தமது 119 தொழுநோயாளர் இல்லங்களிலும், 745 நடமாடும் வைத்திய நிலையங்களிலும், 97 பாடசாலைகளிலும் 186,000 தொழுநோயாளரையும், 22,000 வறியோர் நோயாளரையும் 14,000 அநாதைச் சிறுவரையும் பராமரித்து வருகின்றனர்.

உலகின் பல பகுதிகளிலும் 350 இல்லங்களில் இச்சபையைச் சேர்ந்த 3400 கன்னியரும் துறவிகளும் உள்ளனர். இவற்றுள் 146 இல்லங்கள் இந்தியாவில் உள்ளன.

ஏழை — எளியவர்களுக்கு செய்வதெல்லாம் அவருக்கே செய்கிறோம் என்ற யேசுவின் போதனைதான் இக் கன்னியர்களின்பணிக்கு மூலவேர் ஆகும்.

# மயிலைப்பங்கில் வரவேற்பு விழா

எமது முதற் கனியான சிஸ்ரர் பெனிற்ரு அவர்களை மயிலைப் பங்குமக்கள் கடந்த ஆண்டு மார்கழி 22 ஆந் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் சிறப்பாக நினைவு கூர்ந்தனர். அன்றைய திருப்பலி அருள்தந்தை ஜெராட் அவர்களால் நிறைவேற்றப் பட்டது. அவர் அன்று தமது உரையில்

"துறவறம் என்பது பந்த பாசத்திற்கு அப்பாற்பட்டது. உலகத்தை வெறுப்பது துறவறம் அன்று. கிறிஸ்து எப்படி உலகை அன்பு செய்தாரோ அதே போன்றுதான் துறவறம். துறவறநிலை என்றால் மனிதனுக்குரிய இச்சைகளைத் துறப்பது துறவறவாழ்வு

இன்று திருச்சபை இல்லறத்தை புனிதமானதாகக் கருதுகிறது எனக் கூறிய அவர் இல்லறத்திற்கும், துறவறத்திற்கும், உள்ள ஒற்றுமைகளை இன்னும் ஆழமாகக் கூறியதோடு அருட்செல்வி அவர்களை வாழ்த்தி அவ தெரிந்தெடுத்த சேவை மிகவும் புனிதமானதெனக் கூறி தமது உரையை முடித்துக்கொண்டார் திருப்பலி முடிவுற்றதும், அருட்செல்வி பெனிற்ரு அவர்களை மகிழ்விப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட கலைநிகழ்ச்சிகள் நடந்தேறின அன்றைய விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அழைக்கப்பட்டவர்கள் பலர் அருட்செல்வி பெனிற்ரு அவர்களைப்பற்றியும் அவர்தெரிந்தெடுத்த சேவை மிகவும் கஷ்டமான சேவையாக இருந்தாலும் கூட இப்பணியை மிகவும் விருப்பமாக ஏற்றுக்கொண்டார்கள் என்றும் இந்த அருட்செல்வியை அடைய இந்தச் சமுதாயம் பெருமைப் பேறு அடைகின்றது என்றும், மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

எமது பங்குத்தந்தை பீற்றர் துரைரட்ணம் அவர்கள் தமது உரையில் எமது பங்கில் புதிய கன்னியர்களும், குருக்களும் தோன்றவேண்டும் என்றும், திருச்சிலுவை கன்னியர்களின் சேவை மிகவும் சிறந்ததென்றும் கூறி தமது உரையை முடித்துக்கொண்டார். விழாக் காணும் அருட்செல்வி பெனிற்ரு அவர்கள் தமது ஆசியுரையில் இங்குள்ள சின்னச் சிறார்களை மக்கள் அனைவரின் சேவைக்கு தங்களை அர்ப்பணிக்கும்படி கூறி தமது ஆசியுரையை முடித்துக்கொண்டார். இறுதியாக நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

புனிதசெபஸ்தியார்பங்குமக்கள்

# கோவையில் குருமார் சங்கம்

பணஜி என்னுமிடத்தில் விடுதலை இறையியல் சார்பான குருக்கள் அக்டோபர் 21-ம் திகதி ஒரு சங்கத்தை அமைத்தனர். இதுபற்றி பத்திரிகைகளில் நடந்த சில வாதப் பிரதிவாதங்களில் இதற்கு மேலதிகாரிகளின் அனுமதி உண்டா என்னும் கேள்வியும் எழுப்பப்பட்டது

கோவை ஆயர் ராவுல் கொண்சால்வேஸ் வெளியிட்ட ஒரு சுற்றறிக்கையில் துறவற சபைகளைச் சேராத குருக்கள் தம்முள் சங்கம் அமைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டெனவும், ஆனால் திருச்சபைச் சட்டத்தின்படி விசுவாசிகளின் தனிப்பட்ட எந்த சங்கமும் திருச்சபையின் அங்கீகாரம் பெற வேண்டுமென்றால் அதன் சட்டதிட்டங்கள் திருச்சபையின் தகுதிவாய்ந்த அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு இருக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

பணஜியில் கூடிய சங்கம் விவாதித்த விடயங்களுள் இன்றைய மக்களின் சூழ்நிலைக்கேற்ற மேய்ப்புப்பணியும் அடங்கும். இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் குருக்களுள் சிலர் மக்கள் போராட்டங்கள் பலவற்றில் சம்பந்தப்பட்டுள்ளனர். கோவை மீனவர்களின் போராட்டம், கவாடா ஆதிவாசிகள் பிரச்சினை, திருச்சபை ஊழியர்களின் வேலை நிலைமைகளைச் சீரமைத்தல் ஆகியன இவற்றுட் சிலவாகும்.

"சமயம் ஆன்மீகத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆனால் மனித ஆளுமையில் முழுமையான வளர்ச்சி வேண்டும். ஏனெனில் நாமும் சமுதாயத்தில் ஒரு பகுதியினர்" என இந்திய கத்தோலிக்க குருக்கள் பேரவையின் மங்களூர்க்கிளைத் தலைவர் பிதா ஜோண் பெர்ணாண்டஸ் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை திரு. நிக்கலஸ் பேமஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்